S.H.M. Jameel
2.8.2004

# Muslims of Akurana
# History and Heritage

(36)

DONATED
by
S.H.M. JAMEEL

*A PRESENTATION*
*OF THE*
**Ministry of Highways and**
**Muslim Religious Affairs**

Ex-Libris S.H.M. Jameel
Donated to the Library
South Eastern University of Sri Lanka

Dept. of Muslim Religious & Cultural Affairs,
34, Malay Street,
Colombo 02,
Sri Lanka.
2001

MAIN LIBRARY, SEUSL
SJ008531
008531

*Title* : Muslims of Akurana
History and Heritage

*Editor* : Editorial Group of the Dept. of Muslim Religious & Cultural Affairs

*Publishers* : The Dept. of Muslim Religious & Cultural Affairs,

34, Malay Street,
Colombo 02,
Sri Lanka.

*First Edition* : 2001

*Copy right* : (C) Publishers.

LIBRARY
25 NOV 2011
*SEUSL*

# அக்குறணை முஸ்லிம்களின் வரலாறும் பாரம்பரியமும்

பதிப்பாசிரியர் : முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்கள
பதிப்பாசிரியர் குழு

வெளியீடு : நெடுஞ்சாலைகள் முஸ்லிம் சமய, விவகார அமைச்சு

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
34, மலே வீதி, கொழும்பு 2,
இலங்கை.
2001

This Book is published
on the occasion of the

**National Meelad - Un - Nabi Celebrations - 2001**
**held at Akurana**

**on October 13th, 2001**
**Hijri 1422**

and presented to

**HER EXCELLENCY CHANDRIKA BANDARANAIKE KUMARATUNGA**
President of the Democratic
Socialist Republic of Sri Lanka

by

**Hon. A.H.M. Fowzie, M.P.**
Minister of Highways and Muslim Religious Affairs

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சிறப்புரை | : | கௌரவ அமைச்சர் |
| வெளியீட்டுரை | : | பணிப்பாளர் |
| மதிப்பீட்டுரை | : | மேலதிகச் செயலாளர் |
| அத்தியாயம் | : | 1. அக்குறணையின் அமைவும் சுருக்க வரலாறும் |
| | | 2. அக்குறணையின் குடிப்பரம்பலும் சமூக கலாசார பண்புகளும் |
| | | 3. அக்குறணை முஸ்லிம்களின் கல்வி வரலாறு |

# சிறப்புரை

இலங்கை முஸ்லிம்கள் வரலாற்றில் தனக்கென்று தனியான ஒரு இடம் பிடித்துக் கொண்டுள்ள கண்டி மாவட்டத்தில் அக்குறணைப் பிரதேசம் நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே இலங்கை அரசு 2001 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாதுந்நபி விழா வைபவங்களை இப்பிரதேசத்தில் நடாத்துவதற்குத் தீர்மானித்தது.

எந்தவொரு சமுதாயத்திற்கு வரலாறு இல்லையோ, அந்த சமுதாயத்திற்கு எதிர்காலம் இராது என்பது ஆய்வாளர்கள் பலரினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆழமான கருத்து. இதனை மையமாக வைத்தே இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றினை ஆவணப்படுத்துவதன் மூலம் வருங்கால சந்ததியினருக்கு அதனை எத்தி வைக்கும் முயற்சியில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கடந்த பல ஆண்டு காலமாக செயற்பட்டு வருகின்றது. இச்செயற்பாட்டிற்கு ஒரு தளமாகவும், களமாகவும் தேசிய மீலாதுந்நபி விழாவைத் திணைக்களம் பயன்படுத்துவது பொருத்தமானதே. தேசிய மீலாதுந்நபி விழா நடத்தப்படும் மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றினை விழாவின் பிரதான வைபவத்தின் போது முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்டு வருகின்றது.

இலங்கையில் முஸ்லிகள் ஒரு சிறுபான்மை சமூகமாக வாழ்ந்த போதிலும். நாட்டின் சுதந்திரத்திற்கும் சுபீட்சத்திற்கும் செய்திருக்கின்ற. செய்து கொண்டிருக்கின்ற தியாகங்களும் சேவைகளும் ஏனைய சமூகத்தவர்களுடன் ஒப்பிடுகையில் எந்த வகையிலும் சளைத்ததல்ல. நாட்டின் நாலா புறங்களிலும் பரவலாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் இன, மத, மொழி வேறுபாடுகள் ஏதுமின்றி ஏனைய சமூகத்தவர்களுடன் நேசக்கரம் தொடுத்து வாழ்ந்து வருவதை எவரும் மறுப்பதற்கில்லை. அது முஸ்லிம்களின் சிறப்பம்சங்களில் ஒன்று.

அக்குறணைப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களின் வரலாறு கண்டி மாவட்ட வரலாற்றினுள் அடங்கும் ஒன்றாகும். முன்னொரு காலத்தில் பௌத்தர்களின் விசேட ஆலயமான தலதாவில் நடைபெறும். 'பெரஹரா' க்களில் கூட முஸ்லிம்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றிருந்ததற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. அக்குறணைப் பிரதேச முஸ்லிம்களும் அத்தகைய முக்கிய வரலாற்றுச் சுவடுகளோடு பின்னிப் பிணைந்திருக்கின்றார்கள்.

இத்தகைய வரலாற்றுச் சான்றுகளை வருடாந்தம் தொகுத்து வெளியிடும் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பெறுமதி மிக்க இம்முயற்சி பாராட்டுக்குரியது. அமைச்சின் மேலதிகச் செயலாளர் அல்ஹாஜ் ஏ. சீ. எம். றாஸீக். முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். றபீக் முன்னாள் பணிப்பாளர் அல்ஹாஜ் ஏ. காலித்தீன் ஆகியோர்களினது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

*தேவையான தகவல்களையும் கட்டுரைகளையும் வழங்கி திணைக்களத்தின் முயற்சிக்கு உரமூட்டி வரும் வரலாற்று ஆசிரியர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.*

*நன்னோக்கோடு செய்யப்படும் காரியங்கள் அனைத்தும் நல்ல விளைவுகளையே தரும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு. எல்லாம் வல்ல அல்லாஹ் எமது முயற்சிகளை அங்கீகரிப்பானாக.*

**ஏ.எச்.எம். பௌஸி, பா.உ.**
*நெடுஞ்சாலைகள் முஸ்லிம் சமய, விவகார அமைச்சர்*

# மதிப்பீட்டுரை

பல நூற்றாண்டு காலமாக இலங்கைத் திருநாட்டில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களது வரலாறு நூலுருவில் உருவாக்கப்பட வேண்டும் என்ற நீண்டகால அவாவின் மற்றுமொரு அங்கம் இன்று நிறைவேறுகின்றது. அக்குறணை பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களது வரலாற்றுப் பாரம்பரியம் இன்று நூலுருப் பெற்று உங்கள் கைகளில் தவழுகின்றது.

இதுவரை களுத்துறை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை, மாத்தறை, அம்பாறை, கம்பஹா, புத்தளம் எனும் மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களது வரலாறு நூல்வடிவில் வந்துள்ளது. அக்குறணை முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் தனியான ஒரு நூலாக வெளிவரவேண்டும் என்ற முஸ்லிம் சமய விவகார அமைச்சரின் அவாவுக்கிணங்க இந்நூல் வெளிவருகின்றது.

அகிலத்துக்கோர் அருட்கொடையாக அவதரித்த அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பெயரில் தேசிய ரீதியில் கொண்டாடப்படும் ஒவ்வொரு விழாவிலும் இவ்வாறு முஸ்லிம்களது வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கூறும் நூல்களை வெளியிட்டு வருகிறோம்.

முஸ்லிம்களது வரலாற்றப் பாரம்பரியம் மேலும் ஆராயப்படுவதற்கு இந்நூல் எதிர்கால சந்ததியினருக்கு சிறிதேனும் உதவியாக அமையுமாயின் எமது முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் மகிழ்ச்சி அடையும்.

அக்குறணை மக்களின் வரலாற்றுப் பாரம்பரியம் எனும் இந்நூலை ஆக்கும் முயற்சியில் முன்னின்ற அக்குறணையின் மைந்தர்கள் பற்றி நான் குறிப்பிடவேண்டும்.

முன்னைநாள் கல்விப் பணிப்பாளரும் கல்விமானும் சமூக சேவையாளருமான அல்ஹாஜ் எம். சரீப் அவர்கள் நூலாக்கக் குழுவுக்குத் தலைமை தாங்கி எல்லா ஆலோசனைகளையும் அளித்தார்கள். மற்றொரு முன்னைநாள் கல்விப் பணிப்பாளரான அல்ஹாஜ் ஏ. எம். ஏ. கபூர் அவர்கள் பல விவரங்களையும் ஆலோசனைகளையும் நூலாக்கக் குழுவுக்கு வழங்கினார்கள். அல்ஹாஜ் எச். எம். எம். சித்தீக் ஓய்வுபெற்ற ஆசிரியரவர்கள் நூலாக்கக் குழுவில் பங்கேற்றுள்ளார்கள். ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரான அல்ஹாஜ் என். எம். ஹலீம் அவர்கள் பல்வேறு தகவல்களையும் ஒன்று திரட்டி கையெழுத்துப் பிரதியை ஆக்கிய பெருமைக்குரியவர். ஓய்வுபெற்ற ஆசிரியர்களான அல்ஹாஜ் நுஃமான் மௌலவி அவர்களும், எம். எஸ். எம். சஹாப்தீன் அவர்களும் பல தகவல்களைச் சேகரித்து நூலாக்கத்துக்கு உதவியுள்ளனர். பல்கலைக்கழக பட்டதாரி மாணவர் எம். முஸ்லிம்



4 - CM 1413

இந்நூலாக்கத்திற்கு உதவியுள்ளார். மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் இவர்கள் எவரும் திணைக்களத்திலிருந்து எந்த பிரதிபலனையும் எதிர்பாராது இச்சேவையைச் செய்தனர் என்பதாகும். இக்குழுவுக்கு இணைப்பாளராக இருந்து செயலாற்றிய அக்குறணை பிரதேச உதவிச் செயலாளர் ஜனாப் ஓ. எம். ஜாபிர் அவர்களுக்கு திணைக்களம் கடமைப்பட்டுள்ளது.

நூல் அச்சேறும் போது முஸ்லிம் சமய விவகார அமைச்சராக இருக்கும் அல்ஹாஜ் செய்யத் அலவி மௌலானா அவர்கள் தேவையான அறிவுரைகளை வழங்கி இம்முயற்சியில் ஊக்கப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தேவையான ஆலோசனைகளை வழங்கி அமைச்சின் செயலாளர் எஸ். சி. மான்னப்பெரும அவர்கள் இப்பணியில் எம்மை ஊக்கப்படுத்தினார். முன்னைய பணிப்பாளர் அல்ஹாஜ் ஏ. காலிதீன் அவர்கள் கையெழுத்துப் பிரதியை தொகுத்து வழங்கி உதவினார்கள். இப்பணியில் பணிப்பாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். ரபீக் அவர்களும் மற்றும் திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள் உட்பட எல்லோரதும் ஒத்துழைப்புக்கு அமைச்சின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுளேன்.

இச்சிறு நூலை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய அரசாங்க அச்சகக் திணைக்களத்துக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். இறுதியாக இந்நூலுக்கு இச் சிறப்புரையை வழங்க வாய்ப்புக் கிடைத்தமையயிட்டு அக்குறணையின் மைந்தன் என்ற முறையில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்.

**ஏ. ஸீ. எம். ராஸிக்,**
மேலதிகச் செயலாளர்,
உள்நாட்டு, வெளிநாட்டு, வர்த்தக, வாணிப,
கப்பற்றுறை, அபிவிருத்தி, முஸ்லிம் சமய,
விவகார அமைச்சு.

# வெளியீட்டுரை

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அதன் முக்கிய பணிகளில் ஒன்றாக தேசிய மீலாதுந்நபி விழாவை தெரிவு செய்த மாவட்டம் ஒன்றில் வருடந்தோறும் நடாத்தி வருவதுடன், அவ்விழாவினையொட்டி அவ்வவ் மாவட்டங்களின் முஸ்லிம்களின் வரலாற்றினையும் நூலுருவில் வெளியிட்டு வருகின்றது.

இலங்கைவாழ் முஸ்லிம்களின் வரலாறு, கலாசார விழுமியங்கள், பொருளாதாரம், கல்வி மேம்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்வதற்குத் தகுந்த வரலாற்று நூல் இல்லாமையை ஓரளவேனும் பூர்த்தி செய்வது இம்முயற்சியின் நோக்கமாகும்.

இவ்வாறான வரலாற்று ஏடுகளைத் தயாரிக்கும் பணியில், முக்கியமாக அவ்வவ் மாவட்டங்களைச் சேர்ந்த கல்விமான்களையும், எழுத்தாளர்களையும் திணைக்களம் ஊக்குவிப்பதினால் குறித்த மாவட்டங்களில் இருக்கும் வரலாற்று ஆதாரங்கள், பாரம்பரிய கதை வழக்குகள் ஆகியவற்றை வெளிக்கொணர்ந்து, அவற்றைப் பதிப்பிக்கக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான நூல்கள் எதிர்கால எமது சமுதாயத்திற்கு நல்ல வரலாற்றத் துணை ஏடாக அமையும் என்பது எனது கருத்தாகும்.

ஏற்கனவே எட்டு மாவட்டங்களில் முஸ்லிம் வரலாற்று நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 1996 ஆம் ஆண்டு கம்பளையில் நடைபெற்ற தேசிய மீலாதுந்நபி விழாவின் போது 'கண்டி மாவட்ட முஸ்லிம் வரலாறு' என்ற நூல் வெளியிடப்பட்டதன் மூலம் கண்டி மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு எழுத்துருவம் பெற்றுவிட்டது. கண்டி மாவட்டத்தின் பழம் பெருமையைப் பறைசாற்றி நிற்கும் அக்குறணை இம்மாவட்டத்தின் முஸ்லிகளின் இதய பூமியாக அமைந்திருப்ப தினால், இம்முறை அக்குறணைப் பிரதேசத்தின் வரலாற்றை தனி நூலாகப் பதிப்பிக்கத் திணைக்களம் முன்வந்துள்ளது.

இந்நூல் அக்குறணைப் பிரதேசத்தின் வரலாற்றினை அம்மக்களின் பாரம்பரியம், அவர்களின் சமயக் கோட்பாட்டுடனான வாழ்க்கை முறை, அரசியலில் அப்பகுதி மக்களின் பங்கு போன்றவற்றை விரிவாக ஆராய்கின்றது. இந்நூலிற்குப் பங்களிப்பு செய்த ஆசிரியர் குழுவிற்கு எனது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். இதனைப் பதிப்பிப்பதற்கு உழைத்த திணைக்களத்தைச் சேர்ந்த அனைவரையும் நான் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

இத்திணைக்களத்தின் தொடர் முயற்சியில் ஒன்றான இவ்வாக்கப் பணியில் எனக்கு முன்னிருந்த பணிப்பாளர்களின் அடியொட்டி, இப்பதிப்புப் பணியில்

*திணைக்களத்தின் பணிப்பாளர் என்ற வகையில் பங்கேற்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக இறைவனுக்கு எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், நாட்டில் அனைத்து மாவட்டங்களினதும் முஸ்லிம் வரலாற்று நூல்கள் வெளிவருவதன் மூலம் திணைக்களத்தின் இப்பணி நிறைவு பெற எல்லாம் வல்ல நாயனை வேண்டுகிறேன்.*


***அல்ஹாஜ் எம். ஐ. எம். றபீக்.***
*பணிப்பாளர்,*
*முஸ்லிம் சமய, கலாசார,*
*பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.*

# முன்னுரை

அகில இலங்கை ரீதியில் மீலாதுந் நபி விழா கொண்டாடப்படும்போது, கொண்டாட்டம் நடக்கும் பகுதியின் வரலாறு எழுதப்படும் வழக்கு தொடர்ந்து இருந்து வந்துள்ளது. இம்முறை இக்கொண்டாட்டம் அக்குறணையில் நடைபெறுவதால் அக்குறணையின் வரலாற்றை எழுத ஒரு குழுவை முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு நியமித்தது. ஏற்கனவே கண்டி மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு மீலாதுந் நபி விழாவின் போது வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே கண்டி மாவட்டத்தின் ஒரு சிறு பகுதியான அக்குறணையின் வரலாற்றை எழுதும்போது பல விடயங்கள் திரும்பவும் கூறப்படுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. ஆயினும், முன்பு எழுதப்பட்டவை பலரது ஆக்கங்களைக் கொண்டதாக இருந்தமையால் முரண்பாடான கருத்துக்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆகவே அவ்வாறான நிலையைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கோடு சில கலந்துரையாடல்களை நடாத்திய பின் இந்நூலை இக்குழு ஆக்கியது.

பேராதனைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத்துறைப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் கூறுவது போன்று இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைப் பூரணமாகக் கூறும் நூல் ஒன்று இற்றை வரை எழுதப்படவில்லை. இஃது ஓர் அவசியத் தேவை எனினும், முஸ்லிம்கள் இது பற்றிச் சிந்திக்கவில்லை. சமீப காலத்தில் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி அவர்கள் பதிப்பித்த ஆங்கில நூலும், பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். ஐ. எம். அமீன் அவர்கள் எழுதிய நூலும் இக்குறையைத் தீர்க்கப் பெரிதும் உதவியுள்ளன. மேலும், திருமதி தேவராசா அவர்களது நூலும் சில துறைகள் பற்றி ஆராய்ந்துள்ளது. சிலரால் வெவ்வேறு துறைகளில் எழுதப்பட்ட கட்டுரைகளும் உள்ளன. கலாநிதி சுக்ரி அவர்களது நூலில் பஸால் தாவூத் என்பவர் குறிப்பிடுவது போன்று இலங்கை முஸ்லிம்கள் பற்றிய பூரண ஆய்வு இதுவரை நடந்ததில்லை. விடயங்களைத் திருப்பித் திருப்பிக் கூறும் சில கட்டுரைகளையே அங்கும் இங்கும் காண முடிகின்றது. பெரும்பாலான கட்டுரைகள் முஸ்லிம் அல்லாதோரால் எழுதப்பட்டவை ஆகும். ஆராய்வுக்கான ஒரு மத்திய நிலையம் இல்லாமை, நூல் நிலையம் இல்லாமை, நிதி வசதிகள் இல்லாமையே இது தொடர்பான ஆய்வு நடவாமைக்கான முக்கிய காரணங்களாகும். என்றும் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

அக்குறணையின் வரலாற்றை எழுதத் தொடங்கிய குழுவுக்கும் பல பிரச்சினைகள் இருந்தன. சில தகவல்களைத் தந்துதவக் கூடியவர்கள் கூட அவற்றைத் தந்துதவத் தயங்கினர். தாம் வருங்காலத்தில் இத்துறையில் நூல் ஒன்றை ஆக்க உத்தேசித்துள்ளதாக அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். சில ஆக்கங்களில் இருந்து தேர்ந்தெடுத்த விடயங்கள், பரம்பரையாகச் சொல்லப்பட்டு வந்த கதைகள் ஆகியவற்றை ஆதாரமாக வைத்து இந்நூல் எழுதப்படுகின்றது. வருங்கால ஆராய்ச்சியாளர்களுக்குத் துணையாக இது அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம். இங்கு சமயம், கலாசாரம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை

கொடுக்கப்படுகின்றது. நூலுக்கு இவை பொலிவு தரும் என்றும் விரிவான ஆராய்ச்சியில் ஈடுபடுவோருக்கு இது உதவும் என்றும் குழு கருதுகின்றது. நூலை ஆக்குவதற்கு மிகக் குறுகிய காலமே கிடைத்ததால் பூரணமான ஆய்வு நடாத்த முடியாமல் போயிற்று.

*குழுவில் இடம்பெற்றோர் :*

(1) எம். ஷரீப்
(2) ஏ. எம். ஏ. கபூர்
(3) மௌலவி நுஃமான்
(4) எச். எம். ஸித்தீக்
(5) என். எம். ஹலீம்
(6) எம். எஸ். எம். சிஹாபுதீன்
(7) எம். எம். ஏ. எஸ். முஸ்லிம்

## அக்குறணையின் அமைவும் சுருக்க வரலாறும்

அக்குறணை, மாத்தளைக்கும் கண்டிக்கும் இடைப்பட்டதும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் சில கிராமங்களை அடக்கியதுமான இடப்பரப்பாகும். அக்குறணைப் பிரதேச செயலாளர் பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு தனி முஸ்லிம் கிராமங்களைக் கொண்டதாக இருந்த அக்குறணை இன்று 90 கிராமங்களைக் கொண்ட ஒரு பிரதேச சபைப் பிரிவாக அமைந்துள்ளது. அக்குறணைப் பிரதேச சபை ஜனவரி 1988 இல் உருவாக்கப்பட்டதாகும். இப்பிரிவில் சிங்கள, முஸ்லிம் கிராமங்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் சில கிராமங்கள் முஸ்லிம்கள் மிகக் குறைந்த அல்லது முஸ்லிம்களே இல்லாதவையாக உள்ளன. ஆரம்ப காலத்தில் அக்குறணை என்பது ஒரு சிறிய கிராமத்தையே குறித்தது. இன்றுள்ள அக்குறணை நகரை மையமாகக் கொண்டு புளுகொஹதென்னையில் அமைந்துள்ள பழைய பள்ளிவாசல் வரையுள்ள கிராமப் பகுதியே ஆரம்ப அக்குறணை ஆகும். கஹவத்தை, பரணகம, திப்பிட்டிய முதலிய கிராமங்களும் பின்னர் அக்குறணையோடு சேர்க்கப்பட்டன. தபாற்கந்தோர் அரசாங்க வைத்தியசாலை போன்ற வசதிகளோடு அக்குறணைக் கிராமம் விருத்தியடையத் தொடங்கி தற்போது இப்பிரதேசத்தில் உள்ள சகல முஸ்லிம் கிராமங்களையும் உள்ளடக்கியதாக அக்குறணை மிளிர்கின்றது. தனியே முஸ்லிம்களைக் கொண்டிருந்ததினால் அக்குறணைக்குச் "சிறு மக்கம்" என்ற பெயர் வந்ததாகவும் சிலர் கூறுவர்.

இன்று ஹரிஸ்பத்துவ என்று அழைக்கப்படுகின்ற தேர்தல் தொகுதி முன்பு (1960) அக்குறணை என்ற பெயரைப் பெற்றிருந்தது. இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள குருவிட்ட கோறளையிலும், குருநாகல் மாவட்டத்தில் உள்ள கிராதலான கோறளையிலும் அக்குறணை என்ற பெயரில் இரு சிறு கிராமங்கள் இருந்ததாக அறியப்படுகின்றது. இலங்கைப் பல்கலைக்கழகச் சிங்களப் பேராசிரியர் திரு. டீ. ஈ. ஹெட்டியாராச்சி என்பவரைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு, 1963 ஆம் ஆண்டு கலாசார அமைச்சினால் வெளியிடப்பட்ட சிங்கள கலைக்களஞ்சியம் அக்குறணை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது "அக்குறணை கண்டிக்கு எட்டு மைல்கள் வடக்காக அமைந்த கிராமம் ஆகும். இதன் ஒரு பகுதி ஹரிஸ்பத்துவைக்கும் மறுபகுதி பாததும்பறைக்கும் சேருகின்றது. இவ்விரு பிரிவுகளும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிவது வககல (වගල) எனும் சிற்றாறினால் ஆகும்." பொதுவாக முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அக்குறணையைச் சுற்றியுள்ள சகல கிராமங்களும் அக்குறணை என அழைக்கப்படுகின்றன. புளுகொஹதென்னை, கசாவத்தை, வெளிகெட்டிய, தொடங்கொல்லை, தெலும்புகஹவத்தை, வராகஸ்ஹின்ன, நீரல்லை, மேல்சேன, மல்வானஹின்னை, குருகொட, ஹுரிகொல்ல, தெல்கஸ்தென்ன, பங்கொள்ளாமட, மல்கமன்தெனிய, ரதுகொஹோ, மாவத்தபொல, குருந்துகஹஎல, உக்கல முதலிய கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம் பொதுவாக அக்குறணை என அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் முஸ்லிம்களின் குடியேற்றத்தைத் தொடர்புபடுத்தியே அக்குறணையின் வரலாற்றை ஆராய வேண்டும். ஹிஜ்ரி 65-68 இல் கலிபா மாலிக் இப்னு மர்வானால் நாடுகடத்தப்பட்ட ஹாஷிம் குலத்தவரில் சிலர் இலங்கையில் குடியேறி இருக்கலாம். ஹிஜ்ரி 337 இல் பக்தாதிலிருந்து வந்த மார்க்கப் போதகரான காலித் இப்னு பகாயா என்ற பெரியார் கொழும்பில் ஒரு பள்ளியை நிறுவியதை ஆராய்ச்சியாளரான ஆஸ்டின் த சில்வா குறிப்பிடுகின்றார். இலங்கையுடன் அராபியர்கள் வர்த்தகத் தொடர்பை வைத்திருந்ததன் காரணமாகவே அவர்கள் கலிபா மர்வான் காலத்தில் இங்கு வர முடிந்தது என்ற வரலாற்று உண்மையை மறக்க முடியாது. ஐரோப்பியர் தெற்கு, தென்கிழக்கு ஆகிய நாடுகளுக்கு வருவதற்கு முன்னரேயே அராபியர் இந்தியா, இலங்கை போன்ற பகுதிகளுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தனர். இலங்கையைப் பொறுத்தமட்டில் நாடு பிடிப்பதோ அல்லது சமயத்தைப் பரப்புவதோ அவர்களது நோக்கமாக இருக்கவில்லை. அவர்களது ஒரே நோக்கம் வர்த்தகமாகவே இருந்தது. ஐரோப்பியர் இலங்கையில் கால் வைத்திராவிடில் இலங்கை ஒரு முஸ்லிம் நாடாக மாறியிருக்கும் என்று டெனன்ற் என்பவர் கூறுமளவுக்கு அராபிய முஸ்லிம் வர்த்தகர்களின் செல்வாக்கு இங்கிருந்தது.

முஸ்லிம்கள் அக்குறணையில் எக்காலத்தில் குடியேறினார்கள் என்பதைத் தெளிவுபடுத்த. ஐரோப்பியர் வருகையோடு இலங்கை முஸ்லிம்களின் சனப்பரம்பலில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை நோக்குதல் வேண்டும். வர்த்தகத்திற்காக வந்த முஸ்லிம்கள் இலங்கையின் கரையோர நகரங்களிலும், சிங்கள அரசர்கள் வாழ்ந்த பிரதேசங்களுக்கு அண்மையிலும் பெருமளவு குடியேறி இருந்தனர். கரையோர நகர்களான கொழும்பு, பேருவளை, காலி, வெலிகமை, புத்தளம், கற்பிட்டி, மன்னார், மாந்தை, குதிரை மலை, மாத்தறை, யாழ்ப்பாணம், திருகோணமலை முதலிய கரையோரப் பகுதிகளிலும் : இரத்தினபுரி, குருநாகல், கம்பளை முதலிய உள்நாட்டு நகர்களிலும் முஸ்லிம்கள் பெருமளவு குடியேறி இருந்தனர். வெளிநாட்டு வர்த்தகம் பெரும்பாலும் முஸ்லிம்களின் கையிலேயே இருந்தது. வர்த்தகர்களாக மட்டுமின்றிப் படை வீரர்களாக, கப்பலோட்டிகளாக, கட்டிடக் கலைஞர்களாக, மருத்துவர்களாக, இலங்கை மன்னர்களின் அரசியற் தூதுவர்களாக முஸ்லிம்கள் கடமையாற்றியுள்ளனர். இது பற்றி எல். தேவராஜா அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "ஆரம்ப காலங்களில் முஸ்லிம்கள் இலங்கை மன்னர்களின் அரசியல் தூதுவர்களாகக் கடமையாற்றியதன் ஒரு தொடர்ச்சியாகவே இக்காலத்தில் ஏ. ஸீ. எஸ். ஹமீட் அவர்கள் வெளிவிவகார அமைச்சராகக் கடமையாற்றுகின்றார்."

## இலங்கை முஸ்லிம்கள்

செல்வாக்குள்ளவர்களாகவும் எப்பொழுதும் அரசனின் நட்பையும் நம்பிக்கைகளையும் பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். இலங்கைச் சமூகத்தின்

இன்றியமையாத ஒரு பிரிவினராக இவர்கள் அமைந்தனர். சேர். ராஸீக் பரீத் அவர்கள் 1959 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் பேசும் போது கண்டிப் பகுதியில் வாழ்ந்த சோனகர்கள் சிங்களவர்களைப் போலவே அங்கு வாழ்ந்தார்கள் எனக் குறிப்பிட்டது கவனத்திற்குரியதாகும். கண்டிச் சோனகர்களும் ஆயிரம் வருடங்களுக்கு மேல் அங்கு வாழ்ந்தவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். சிங்களவர் 'மரக்கல' எனவும். தமிழர் "சோனகர்" எனவும் அழைக்கும் முஸ்லிம்கள் அராபியரே. 'மரக்கல' என்னும் பதம் கப்பற் சொந்தக்காரரைக் குறிக்கும். இந்துப் புவியியலில் அராபியாவைச் சோனகம் எனக் குறிப்பிட்டுள்ளதை இங்கு கருத்திற் கொள்ளலாம்.

## ஐரோப்பியர் காலம்.-

வர்த்தகத்திற்காக கீழ்நாடுகளுக்கு வந்த போத்துக்கேயர் அராபிய முஸ்லிம்களைத் தமது எதிரிகளாகக் கண்டனர். போர்த்துக்கேயர் இலங்கையில் 1505 இல் கால் வைத்தனர். அது வரையும் முஸ்லிம்கள் பெரும்பாலும் கரையோரப் பகுதியுடனேயே தமது தொடர்பை வைத்திருந்தனர். அந்தத் தொடர்பு அவர்களது வர்த்தகத் தேவைகளுக்குப் போதுமானதாக இருந்தமையால் நாட்டின் உட்பகுதியை நோக்கிச் செல்ல வேண்டிய தேவை ஏற்படவில்லை. நாடு பிடிப்பது, சமயத்தைப் பரப்புவது என்பவற்றைத் தமது நோக்கமாக அவர்கள் கொண்டிருந்தால் நாட்டின் உட்பகுதிக்கும் சென்றிருப்பர் என ஊகிக்க முடியும். இம்முஸ்லிம்கள் போர்த்துகேயரின் வருகையோடு பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்குட்பட்ட கோட்டை மன்னன் புவனேகபாகு 1526 இல் தனது இராசதானியிலிருந்து வெளியேறுமாறு முஸ்லிம்களுக்குக் கட்டளையிட்டான். இதனால் கொழும்பையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் விட்டு முஸ்லிம்கள் வெளியேற வேண்டியதாயிற்று. இவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னை வரவேற்று தனது இராசதானியில் குடியேற்றினான். முஸ்லிம்கள் மீண்டும் 1626 இல் கோட்டை இராசதானியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்களைக் கண்டி மன்னன் செனரத் வரவேற்று கண்டியின் உட்புறக் கிராமங்களிலும். மட்டக்களப்புப் பிரதேசத்திலும் குடியேற்றினான். 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெருமளவு முஸ்லிம்கள் கண்டிப் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். கணிசமான அளவு முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டிருந்தனர் என்பதை சரித்திர ஆசிரியர் ரி. பி. எச். அபேசிங்க சுட்டிக் காட்டுகின்றார்.

அரசன் செனரத் (சேனாரதன்) மலைநாட்டில் முஸ்லிம்களைக் குடியேற்றினான். இவ்வாறு மலைப்பகுதியில் முக்கியமாகக் கண்டிப் பகுதியில் குடியேறிய முஸ்லிம்களாலேயே இரு சமூகங்களுக்கிடையேயும் இறுக்கமான தொடர்பு ஏற்பட்டதென்பது லோர்னா தேவராசா அவர்களது முடிவாகும். பாதுகாப்புக் காரணங்களுக்காக கலகெதர, மடவளை, அக்குறணை போன்ற இடங்களில் அவர்கள் அதிகமாகக் குடியேற்றப்பட்டனர். இன்றும் அக்குறணை



5 - CM 1413

போன்ற பகுதிகளில் உள்ள குடும்பப் பெயர்கள் முஸ்லிம்கள் எத்துணை கௌரவத்துடன் மதிக்கப்பட்டனர் என்பதற்கு ஆதாரமாகும். உதாரணம் தண்டையார் வீடு, முகாந்திரம் வீடு, விதானையார் வீடு முதலியன. சுருக்கமாகக் கூறின் தமது கொவிகுலத்தவர்களைப் போலவே முஸ்லிம்களையும் மதித்துள்ளனர் எனலாம். இந்தியாவிலிருந்தோ கரையோரப் பகுதிகளிலிருந்தோ குடியேறிய முஸ்லிம்களுக்கு மேலே கூறப்பட்ட பட்டங்கள் வழங்கப்படவில்லை. இவை சுதேசப் பெண்களை மணந்த அராபிய வம்சாவழியினருக்கே உரித்தாயின. தங்களுக்கு காணிகளை (இடங்களை) தந்துதவிய விகாரைகட்கு முஸ்லிம்கள் தங்களின் சமய கலாசாரங்களுக்கு முரண்படாது சேவைகளை வழங்கி வந்தனர். ரொபர்ட் நொக்ஸ் கூறுவது போன்று முஸ்லிம்கள் சமய சுதந்திரத்தை அனுபவித்தே வந்தனர்.

இவ்வாறு முஸ்லிம்கள் 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் உள்நாட்டுப் பகுதிகளில் குடியேறத் தொடங்கிய காலப்பகுதியில்தான் முஸ்லிம்கள் அக்குறணையிலும் குடியேறினார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. சிங்கள கலைக்களஞ்சியம் (සිංහල විශ්ව කෝෂය සංස්කෘතික දෙපාර්තමේන්තුව) இக்குடியேற்றம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட்ட மூன்று அராபியருக்கு இராஜசிங்க மன்னனால் இக்கிராமம் விருப்ப நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. (රාජසිංහ රජු පෘතුගාලුන්ට විරුද්ධ ව සටන්කල අරාබිවරුන් තිදෙනෙකුට මේ ග්‍රාමය සතුටු පඩුරු වශයෙන් දුන් බව සඳහන් වේ.)

அக்குறணை என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பதை நோக்கும் போது இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் குடியேறுவதற்கு முன்பே இப்பெயர் இருந்திருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆஸ்டின் த சில்வா அவர்களின் குறிப்பு, பக்தாதிலிருந்து வந்து ஒரு பள்ளியை நிறுவிய காலித் இப்னு அபூபகாயா பற்றிக் குறிப்பிடுகிறது. ஈராக்கிலிருந்து அராபியர் இலங்கைக்கு வந்ததை இக்குறிப்பு எடுத்துக் காட்டுகிறது. ஈராக்கிலுள்ள "அல்கர்னைன்" என்ற இடத்துப் பெயரையே அவர்கள் அக்குறணைக் குடியேற்றத்திற்கும் இட்டனர் என்ற கர்ண பரம்பரைக் கதையும் இங்கு கவனிக்கத்தக்கது. பஸ்ரா துறைமுகத்திற்கு வடக்காக அமைந்துள்ள இந்நகரின் இன்றைய பெயர் Al-Quarna ஆகும்.

இந்நகரோடு தொடர்புடைய அராபியர் இங்கு குடியேறி இப்பெயரை இட்டிருக்கலாம் என அவுஸ்திரேலிய அடிலெயிட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எச். எம். இசட். பாரூக் குறிப்பிட்டுள்ளார். அல்குர்ஆன் ஓதப்படும் போது அவ்விடத்தால் சென்ற சிங்கள அரசன் அவ்விடத்தை "அகுறண" என அழைத்ததாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர் என்றாலும் இக்கூற்றுக்களை நிரூபிக்கக்கூடிய போதியளவு ஆதாரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இராஜசிங்கமன்னனுக்கு உதவியாக இருந்த மேற்கூறிய மூன்று அராபியர் எவ்வாறு சிங்களப் பெண்களை விவாகம் செய்து கொண்டார்கள் என்பது ஒரு சுவையான செய்தியாக இருக்கின்றது. இவர்கள் சிங்கள உயர்குலப் பெண்களை

மணஞ் செய்து கொள்ள விரும்பினர். உயர்குல மக்களின் ஆதரவு இதற்குக் கிடைக்கவில்லை என்றாலும், மன்னனின் ஆதரவு இருந்தது. மன்னருடைய ஆலோசனைப்படி பெரஹரா விழாவுக்கு வந்த பெண்களுள் மூவரை இவர்கள் அழைத்துச் சென்று மாளிகையில் ஒளித்து வைத்துக் கொண்டனர். அந்த நாள் தமது பெண்களை இழந்த குடும்பத்தினர் அரசனிடம் முறையிட்டனர். அராபியரின் வசிப்பிடத்திற்குச் சென்ற பெண்களை அவர்களிடமே விட்டு விட வேண்டும் என அரசன் எச்சரிக்கை செய்தான். இதை இப்பெண்களின் குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டதாகவும், இவர்களது சந்ததியினர் இன்றும் தொடர்ந்து அக்குறணையில் வாழ்வதாகவும் குறிப்புகள் உள்ளன.

வர்த்தகத்திற்காக வந்த அராபியர் மலபார் பகுதியில் சுதேச தமிழ்ப் பெண்களையும், கண்டிப் பகுதியில் சிங்களப் பெண்களையும் மணஞ் செய்திருப்பர் என ஊகிக்கலாம்.

எஸ். எம். கமாலுத்தீன் (B. A. Dip. in Lib. ; B. Ed Toronto) அவர்கள் 'கீத போதனா ரஞ்சிதம்' என்னும் நூலுக்கு வழங்கியுள்ள முன்னுரையில் அக்குறணை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இக்கிராமம் பற்றி வழங்கி வரும் கூற்றொன்று இதற்கு சரித்திரப் பிரசித்தப் பின்னணி ஒன்றினைத் தருகின்றது. இக்கூற்றின் படிக்கு இக்கிராமம் போர்த்துக்கேயரின் காலத்தில் உருவானது என்று கூறப்படுகின்றது. 1632 ஆம் ஆண்டு முதல் 55 வருட காலம் கண்டியின் மன்னனாயிருந்த இரண்டாவது இராஜசிங்கன் ஆட்சியின் முற்பகுதியில் போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பு நாட்டை வருத்தி வந்தது. கரையோரப் பகுதியில் தமது செல்வாக்கைப் பரப்பிக் கொண்ட பகைவர்கள் மலைநாட்டின் தலைநகராம் கண்டியையும் தாக்க முற்பட்டனர். ஆனால் இம்முயற்சி வெற்றி பெறவில்லை. போர்த்துக்கேயரின் கடுந்தாக்குதலை முறியடிப்பதற்கு உதவியவர்கள் மூன்று அராபிய முஸ்லிம்களாகும். தன் நகர் காத்த நல்லவர்களைக் கௌரவித்த மன்னன் அவர்களை அந்நகருக்கு அருகேயே குடியமர்த்தி மகிழ்ந்தான். இவ்வாறு நிகழ்ந்த குடியேற்றமே அக்குறணைக் கிராமம் என்று கூறப்படுகின்றது." ஊரிலுள்ள மூத்தோர்களிடையே செவிவழிச் செய்தியாக இந்நிகழ்வுகள் நிலவி வருகின்றன. இந்நிகழ்ச்சியைக் கவிஞர் சாஹுல் ஹமீது (T. M. S. ஹமீத்) அவர்கள் பின்வரும் பாடலால் குறிப்பிட்டுள்ளார்.

"கண்டியம் பகுதியைக் காவல் புரிந்த
திண்டிறல் வீரரென்றிசை மிகவீட்டிய
சோனகப் பெரியோர்க்கான பரிசாய்
சிங்கள மன்னன் சீருற வளித்தனன்".

(கீத போதனா ரஞ்சிதம்)

ஆரம்பக் குடியேற்றத்தைத் தொடர்ந்து மேலும் பல குடியேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மன்னனின் குடும்பத்தினருக்குச் சேவை செய்த வைத்தியர்கள் காவலாளர்கள் போன்றோரும் படிப்படியாக இங்கு குடியேறியுள்ளனர்.

அராபியர் மூவர் சிங்களப் பெண்களை மணந்து அக்குறணையில் குடியேறினார்கள் என்பதைச் சற்று ஆழமாக நோக்க வேண்டும். தாய்வழி சிங்களம் எனில், இன்று முஸ்லிம்களின் மொழி தமிழாக இருப்பதற்கு காரணம் என்ன என்று ஆராயும் பொழுது அக்கால சூழ்நிலை பற்றி குறிப்பிட வேண்டியுள்ளது. அராபியர் என்னும் போது அராபிய வழித் தோன்றல்களையே குறிக்கின்றது எனலாம். அரேபியா, பாரசீகம், ஈராக், எகிப்து, அபிசினியா முதலிய நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் அராபியர் என பொதுவாக அழைக்கப்பட்டனர். இவர்கள் நீண்ட கடற் பிரயாணங்களின் மூலம் தென் இந்தியாவை அடைந்து அங்கு தங்கி வியாபார முயற்சிகளில் ஈடுபட்டனர். பாய்மரக் கப்பல்கள் மூலம் வியாபாரக் காற்றுக்களைப் பயன்படுத்தி கடற்பிரயாணம் செய்த அவர்கள் காற்றுக்களின் திசை தமது பிரயாணத்திற்கு ஏற்றதாக அமையும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. நீண்ட காலம் தென் இந்தியாவில் தங்கியிருந்த இவர்கள் இந்திய மொழிகளைக் கற்றிருந்ததோடு இந்திய வாழ்க்கை முறைகளையும் நன்கு அறிந்திருந்தனர். அக்காலத்தில் இந்தியாவின் பல திசைகளிலும் இஸ்லாம் பரவி இருந்ததோடு தென் இந்திய முஸ்லிம்களிடையே அரபுத் தமிழ் என்னும் மொழி வழக்கு ஒன்றும் ஆரம்பமாகியிருந்தது. இஸ்லாம் பற்றிய ஒரு சில நூல்களாவது அரபுத் தமிழில் எழுதப்பட்டன. இச்சூழலில் அரேபியரதும் இந்தியரதும் உறவுகள் வலுவடைந்து காணப்பட்டன. இவ்வராபியர்கள் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்ட போது தென்னிந்திய முஸ்லிம்களும் இலங்கை வந்து குடியேறியுள்ளனர். எனவே, அராபிய முஸ்லிம்கள் அக்குறணையில் குடியேறி உள்ளனர் என்று கூறும் போது அராபிய வழித்தோன்றல்களைக் குறிக்கின்றது எனலாம்.

முஸ்லிம்கள் எப்போதும் தமது மார்க்கக் கடமைகளை உறுதியாகப் பின்பற்றி வந்தனர். அரபுத் தமிழிலே இஸ்லாம் பற்றிய நூல்களும் இருந்தன. இந்தியாவிலிருந்து வந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் தமிழைப் பேசினர். ஆடை, ஆபரணங்கள் தென்னிந்தியாவிலிருந்தே பெறப்பட்டன. இதனால், காலப்போக்கில் முஸ்லிம்களின் மொழி தமிழாகியதோடு, இந்திய (நடையுடை) வாழ்க்கை முறையின் செல்வாக்கும் இவர்களிடையே நிலவத் தொடங்கியது.

இங்கு குடியேறிய முஸ்லிம்கள் டச்சுக்காரர்களோடு தொடர்பு கொண்டதன் காரணமாக ஹாரிஸ்பத்துவையிலிருந்து கீர்த்தி ஸ்ரீ மன்னனால் வெளியேற்றப்பட்ட தாகவும், குறிப்புகள் உள்ளன. எவ்வாறாயினும் மீண்டும் இப்பகுதிக்கு திரும்பிவர அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 1812 இல் பிலிமத்தலாவைக்கு உதவியாக இருந்த பலர் கண்டிப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டதாகவும் 1815குப் பிறகு மீண்டும் அவர்கள் திரும்பி வந்து குடியேறியதாகவும் குறிப்புகள் உள்ளன.

ஆரம்பத்தில் ஒரு சிறிய பகுதியாக இருந்த அக்குறணை காலப்போக்கில் பல கிராமங்களை உள்ளடக்கியதாக மாறியது. ஆரம்பத்தில் குடியேறியோர் இப்பகுதியில் படிப்படியாக காணிகளை வாங்கி இருக்கின்றனர். இங்குள்ள முஸ்லிம்கள் 1793 இற்கு முன்பே காணிகளைச் சொந்தமாகப் பெற்றிருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. 1799 இல் பல கண்டியர்கள் இவர்களுக்கு காணிகளை விற்பனை செய்துள்ளனர். பயாகொடுவ கமரால, கந்தஹேறரல விதானலாகே உக்குரால, அஹங்கொடரால, வெதல்ஹகவத்த உன்னாச்சே, முதலியோர் மகா தேவாலயத்திற்குச் சொந்தமான போகஹகொடுவ என்ற பகுதியை ஆலிம் சாஹிப் அல்லது தேசே குருண்ணஹே என்பவருக்கே விற்றுள்ளனர். இது தொடர்பாக தொடப்பிட்டிய பஸ்நாயக்க நிலமேயுடன் தகராறுகள் ஏற்பட்ட போதும் அரசனுடைய சாசனத்தின் மூலம் (Sannas 1732 SAKA) இக்காணி ஆலிம் சாஹிபுக்குக் கொடுக்கப்பட்டது.

ஆரம்பத்தில் சிங்கள பிரதானிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த இவர்களுக்கு காணிகளை வாங்குவது சிரமமாயிருந்துள்ளது. 1815 இல் கண்டி ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட பின் இந்நிலை மாறத் தொடங்கியது. மாச்சு 1818, நவெம்பர் 1818 ஆகிய திகதிகளில் ஆங்கில அரசினால் வெளியிடப்பட்ட பிரகடனங்களின்படி, முஸ்லிம்கள் சிங்கள அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் முஸ்லிம் அதிகாரிகளே நியமிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தமது ஆரம்ப கிராம எல்லைகளுக்கு வெளியேயும் காணிகளை வாங்கி அக்குறணை மக்கள் குடியேறத் தொடங்கினர். ஹகவத்தை, திப்பிட்டிய, பரணகம முதலிய பகுதிகளும் இவ்வாறு அக்குறணையோடு இணைக்கப்பட்டன. அக்கால சனத்தொகையை நோக்கும்போது (குருகொடை தவிர்ந்த) அக்குறணையில், 1891 இன் சனத்தொகை 1047 ஆக (474 ஆண்கள் 573 பெண்கள்) இருந்தது. மக்கள் பரவலைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**1891 இல் குடித்தொகை :**

| | |
|---|---|
| தெவட்டகஸ்தென்ன | 113 |
| தெவட்டகஹமுலதென்ன | 64 |
| ஹபுகஹமுலதென்ன | 66 |
| கரந்துகஹஎல (குருந்துகஹஎல) | 86 |
| மல்வானகேஹின்ன (மல்வானஹின்ன) | 217 |
| நீல-எல (நீரல்ல) | 162 |
| தெலும்புஹகவத்தை | 230 |
| வராகஸ்ஹின்ன | 109 |

1881 இல் குருகொடையில் சனத்தொகை 226 (111 ஆண்கள் 115 பெண்கள்) இது 1891 இல் 387 ஆக இருந்தது. (165 ஆண்கள்-222 பெண்கள்) கடைசியாக நடந்த ஒல்லாந்து யுத்தத்தின் பின் கீர்த்தி சிறி அரசன் குருகொடைப் பகுதியிலுள்ள முஸ்லிம்களது பல காணிகளை பறித்தெடுத்து (Confiscate) சிங்களவருக்கு கொடுத்ததாகக் குறிப்புக்கள் உள்ளன. குருகொடையில் செவ்வந்திக்கல் (Amethysts) கண்டெடுக்கப்பட்டதாகவும், இவற்றை பரந்த அளவில் எடுப்பதற்கு வேலைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் டி ஒய்லி (D'oyles) குறிப்பிட்டிருந்தார். இதன்படி ஒரு கட்டணம் (1000, vix Dollars) அரசாங்கத்திற்குச் செலுத்திய பின் செவ்வந்திக்கல் அகழ முடியும். ஆங்கிலேயரது அறிக்கை குருகொடையில் சோனகர் (moormen) செவ்வந்திக்கல் பெற்றதாகக் குறிப்பிடுகின்றது.

அக்குறணை மக்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தமையால் செல்வந்தர்களாக இருந்தார்கள் என்றும், பெருமளவு களவுகள் இடம்பெற்றதாகவும், இப்பிரதேசத்தின் ஊடாக செல்லும் வர்த்தகர்கள் தாக்கப்பட்டதாகவும், இதனால் 1878 இல் இங்கு ஒரு பொலிஸ் படை நிறுத்தப்பட்டதாகவும், குறிக்கப்பட்டுள்ளது. இப்பொலிஸ்படை 1881 இல் அல்லது 1882 இல் இங்கிருந்து நீக்கப்பட்டது.

விவசாயத்தை நோக்கும் போது, 1878 இல் 6 ஏக்கர் வயல் நிலம் அக்குறணையிலும், 15 ஏக்கர் குருகொடையிலும் இருந்ததாகப் பதிவுகள் உள்ளன. பத்து ஆண்டுகளின் பின் 1888 இல் இரண்டரை ஏக்கர் வயலே பதியப்பட்டுள்ளது. இதனை நோக்கும்போது அக்குறணை மக்கள் நெற்செய்கையில் அக்கறை காட்டவில்லை என்பது புலனாகின்றது. மக்கள் கல்வியை புறக்கணித்தனர் எனவும், 1886 இல் ஒரு சிறிய அரபு. குர்ஆன் கற்பிக்கும் பாடசாலை இருந்ததாகவும் லோரி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (A. C. Lawrie – 1896) இக்காலத்தில் பல்லேகம்பஹுவில் பாதைக்கு மேற்புறமாக உயர்ந்து செல்லும் நிலத்தில் பள்ளிவாசல் அமைந்திருந்ததாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது புளுகொஹுதென்னையில் இன்றைய பள்ளிவாசலைக் குறிக்கின்றது.

அஸ்கிரி அளுத் விகாரைக்கும், கஹுவத்தை அமுனேவெல அல்லது கல்ஹேன கல் விகாரைக்கும் சொந்தமான காணிகள், கஹுவத்தை, கொனபொல, பமுனுபொல முதலிய கிராமங்களில் இருந்தன. இவற்றை முஸ்லிம்கள் பரிபாலித்து வந்தனர். அதற்காக விகாரைக்கு பணம் செலுத்தியதுடன் உப்பு கருவாடு என்பதையும் கொடுத்து வந்தனர். மேலும் வெற்றிலை, தோற்கயிறு என்பன கொடுத்ததோடு (Pinkama) வைபவங்களிலும் கலந்து கொண்டனர்.

வலகம்பாகு அரசனால் கட்டப்பட்டகல் விகாரை ஒன்று அக்குறணை கஹுவத்தையில் இருப்பதாகவும், அது கி. பி. 1371 இல் மூன்றாம் விக்கிரமபாகு அரசனால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் வாழ்ந்த சிங்களவர்களோடு புதிதாக வந்து குடியேறிய

முஸ்லீம்களும் சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கின்றனர். அக்குறணையின் ஆரம்ப குடியேற்றங்கள் புளுகஹதென்னையைச் சார்ந்த பகுதிகளிலும், தீகலையை அண்மித்துள்ள குருகொடைப் பகுதியிலும் ஏற்பட்டு சனத்தொகை படிப்படியாக அதிகரிக்க ஏனைய பகுதிகளுக்கு பரவியதாகவும் கூறப்படுகின்றது. அக்காலத்திலேயே சிங்களப் பிரதானிகள் வாழ்ந்த இடமாக துனுவில இருந்திருக்கின்றது. 1821 இல் கண்டி, திருகோணமலை பிரதான பாதை அமைக்கப்படுவதற்கு முன்பு துனுவிலையினூடாக கண்டிக்குச் செல்லும் வண்டிப் பாதைகள் இருந்தன. சிற்றாறுகளும் வயல் வெளிகளும் விவசாயத்திற்குப் பொருந்தமான காணிகளும் இங்கு காணப்பட்டன. எனவே, ஆரம்பக் குடியேற்றங்கள் இங்கு அமைந்தன எனலாம். கராம்பு, சாதிக்காய், மிளகு முதலிய வர்த்தகப் பயிர்களை உற்பத்தி செய்வதில் இவர்கள் ஈடுபட்டபோதும் வர்த்தகத்திலேயே பழக்கப்பட்டவர்களாகவும், ஆர்வமுள்ளவர்களாகவும் இருந்தனர், இத்துடன் பல்வேறு துறைகளிலும் அனுபவம் மிக்கவர்களாக இவர்கள் காணப்பட்டனர். வர்த்தக வாய்ப்புக்களை எதிர்பார்த்திருந்த இவர்கள் படிப்படியாக வன்னிப் பகுதிக்குச் சென்று வியாபாரம் செய்யத்தொடங்கினர்.

1796 இல் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளையும், 1815 இல் கண்டியையும் கைப்பற்றினர். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் முஸ்லீம்களுக்கு எதிராக ஏற்படுத்தியிருந்ந கட்டுப்பாட்டுகளை ஆங்கிலேயர் படிப்டியாக நீக்கினர். முஸ்லீம்களுக்கு எதிராக இருந்த வர்த்தகக் கட்டுபாடுகள், முஸ்லீம்கள் தலைநகரில் வாழ்வதற்கு இருந்த தடை என்பவற்றை ஆங்கில அரசு நீக்கியது. இதனைத் தொடர்ந்து அக்குறணை முஸ்லிம்கள் கொழும்பு வரை தமது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடிந்தது. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு இலங்கையில் அறிமுகமாகியதைத் தொடர்ந்து உள் நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடக் கூடிய வாய்ப்பு முஸ்லீம்களுக்குக் கிட்டியது. இப்புதிய பொருளாதாரச் சூழலை அக்குறணை முஸ்லீம்களும் பயன்படுத்திக் கொண்டனர்.

அக்குறணை முஸ்லீம்கள் தமது வர்த்தகத் தொடர்புகளைப் பெரும்பாலும் கடை வைத்து வியாபாரம் செய்வதிலும் வன்னி என்று வழங்கப்பட்ட வடமத்திய மாகாணப் பகுதிகட்குச் சென்று தானியம், மாடு போன்றவற்றை வாங்கி வருவதிலேயுமே வைத்திருந்தனர். 1867 இல் கண்டி - கொழும்பு புகையிரதப் பாதை திறப்பு கரையோர இந்திய வம்ச முஸ்லீம்களை உள்நாட்டுக்கு வந்து வர்த்தகம் செய்ய உதவிற்று. இதனால் கண்டிய முஸ்லீம்களின் கலாச்சாரத்தில் பல மாற்றங்களைப் புகுத்தியது. எனினும், அக்குறணையைப் பொறுத்தவரையில் கண்டிச் சோனகரின் எண்ணிக்கையில் மிகச் சிறிய மாற்றத்தையே இது ஏற்படுத்தியது எனலாம். 1901 இல் எடுக்கப்பட்ட புள்ளிவிபரம் அக்குறணையின் முஸ்லீம்களின் எண்ணிக்கையை எடுத்துக் காட்டுகின்றது.

**1901 இன் புள்ளிவிபரம்**

| | முஸ்லீம்கள் | மொத்தம் |
|---|---|---|
| அக்குறணை | 340 | 340 |
| வெலிக்கெட்டிய | 248 | 248 |
| புளுகொஹதென்னை | 285 | 285 |
| குருகொடை | 407 | 412 |
| பங்கொள்ளாமட | 239 | 251 |
| தெலும்புகஹவத்தை | 220 | 220 |
| தெமட்டகஸ்தென்ன | 115 | 115 |
| தெவடகஹமுலதென்னை | 132 | 135 |
| மாவதுபொல | 192 | 192 |
| நீரல்ல | 303 | 303 |
| குருந்துகஹஎல | 130 | 146 |

வர்த்தக நோக்கிலேயே வந்து அதிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்த கண்டிச் சோனகர், விவசாயம், அரசாங்கத்தொழில், கைத்தொழில்ஆகியவற்றில் காட்டிய ஆர்வம் மிகக் குறைவு. தானிய வர்த்தகத்தில் ஈடுபட்ட அக்குறணை முஸ்லிம்கள் பொலநறுவை, அனுராதபுர மாவட்டங்களில் தானிய விளைச்சலில் அக்கறை காட்டவில்லை எனினும், நிலச்சொந்தக்காரர்களாக மாறியுள்ளனர். 1911 இல் எடுக்கப்பட்ட கணக்கு விபரம் முஸ்லீம்களில் பலர் காணிச் சொந்தக்காரர்களாக இருந்ததைக் காட்டுகின்றது. 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கண்டி மாவட்டத்தில் கைமாறிய அதிக அளவான தேயிலைத் தோட்டங்களை அக்குறணை மக்களே வாங்கியுள்ளனர். அரசாங்க உத்தியோகத்தில் காட்டப்பட்ட ஆர்வம் மிகக் குறைவு. உத்தியோகத்திற்காகத் தேவைப்பட்ட கல்வி முறையே அதற்கு முக்கிய காரணம். எம்மையே அழிக்க முற்பட்டவர்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் நாம் படிப்பதா என்ற அலட்சியப் போக்கையே அவர்கள் கையாண்டனர். ஆயினும், 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இதில் மாற்றம் காணப்பட்டதை இங்கு நோக்கலாம்.

இன்றைய அக்குறணை நாம் முன்பு குறிப்பிட்டது போன்று மிகப் பெரும்பாலான முஸ்லீம்களைக் கொண்ட கிராமங்களின் கூட்டல்ல. இது பல முஸ்லீம் பெரும்பான்மைக் கிராமங்களையும், ஒரு சில கலப்புக் குடியேற்றக் கிராமங்களையும், மிகச் சில முஸ்லீம்களே இல்லாத கிராமங்களையும் கொண்டதாகும்.

பாலனத் துறையிலும் அக்குறணை முஸ்லீம்கள் ஆர்வம் காட்டியது மிகக் குறைவு. தமது தொழிலான வரத்தகத்திற்கு ஒவ்வாத துறையாக அவர்கள்

அதனைக் கண்டனர். 1818 இல் வெளியிடப்பட்ட ஒரு பிரகடனம் முஸ்லீம் பகுதிகளுக்கு முஸ்லீம் ஆராச்சி (கிராமத் தலைவர்) விதானை போன்றோரை நியமிக்க வழிவகுத்தது. அதற்கு மேலே உள்ள பதவிகளைக் கல்வி மூலமோ போட்டிப் பரீட்சை மூலமோ பெற்றுக் கொள்ள அக்குறணை முஸ்லீம்கள் அக்கறை காட்டவில்லை. எனினும். செல்வம் மட்டும்பெரிய அந்தஸ்த்தைத் தராது என்று கருதியதால் கிராம மட்டத்தில் அவர்களின் கவனம் செல்லத் தொடங்கியது. அக்குறணையை அடக்கிய உடகம்பஹ. பள்ளேகம்பஹ என்ற கிராம சபைகளிலே ஒரு சில முஸ்லீம் அங்கத்தவரே இருந்தும். பல வருடங்களாக முஸ்லிம் தலைவர்கள் இருந்து வந்துள்ளது ஒரு சிறப்பாகும். இதற்கான முக்கிய காரணம் பெரும்பான்மை மக்கள் முஸ்லீம்களிடத்து வைத்திருந்த பெரு நம்பிக்கையும் அத்தோடு முதல் முதலில் தலைமைத்துவத்துக்கு முன்வந்த முஸ்லீம் ஒரு படித்தவராக மதிக்கப்பட்ட அக்குறணையின் முதல் ஆசிரியர் ஜனாப். ரி. எம். ஷாகுல் ஹமீத் அவர்கள் என்பதுமாகும். அரசாங்க சேவையில் இருந்த போது அரசியலில் ஈடுபட அனுமதி பெற்ற முதல் இலங்கையரும் அவரே எனக் கருதப்படுகின்றது. படித்தவர்கள் இவ்வாறு தலைமைப் பதவி வகித்த நிலை குறுகிய காலமே இருந்தது. அக்குறணையில் மட்டுமல்ல. பொதுவாக முஸ்லீம்களின் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை இதே நிலை தான் இருந்தது. வரலாற்றுப் பேராசிரியர் கே. எம. டி. சில்வா அவர்கள் குறிப்பிட்டது போன்று. கலாநிதி பதிஉத்தின் அவர்களது காலத்தை தவிர முஸ்லிம்களின் தலைமைத்துவம் படித்தவர்களின் தலைமைத்துவமாக இருக்கவில்லை. என்பதைஞாபகப்படுத்திக் கொள்வது வருங்காலத்திற்கு ஒரு வழிகாட்டலாக அமையும்.

## அரசியல் வரலாறு

அக்குறணையின் அரசியல் வரலாற்றை நோக்கின். 1932 இல் டொனமூர் சீர்திருத்தங்களோடு சர்வசன வாக்குரிமை அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அக்குறணையில் உள்ள மத்திய வகுப்பு மக்களிடையேயும் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படலாயிற்று. ஹாரிஸ்பத்துவின் இரு பிரிவுகளான உடகம்பஹ. பல்லேகம்பஹ ஆகியவற்றுக்கான கிராம சபைத்தேர்தலில் பல முஸ்லீம்கள் போட்டியிட்டு கிராமசபை உறுப்பினர்களாகவும் தலைவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இப்பிரிவுகளில் சிங்களவர் பெரும்பான்மையாக இருந்த போதும் கூட. முஸ்லீம்கள் கிராமசபைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டதை நோக்கும்போது சிங்கள மக்கள் முஸ்லீம்கள்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தனர் என்பதைக் காணலாம்.

உடகம்பஹ கிராமசபைக்கான தேர்தலில் வெற்றி பெற்று முதன்முதலாக 1932 இல் ரி. எம். எஸ். ஹமீட் அவர்கள் கிராமசபைத் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து 1938 இல் எஸ்.'எச். எம். . அப்துல் காதர் ஹாஜியார் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1944 இல் எச். எம். மொஹிடீன் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 1962 வரை 18 வருடங்கள் தொடர்ந்து பதவியில் இருந்தமை குறிப்பிடக் கூடியதாகும்.

இதே காலத்தில் பல்லேகம்பஹ கிராமசபையில் ஏறக்குறைய 30 வருடங்கள் ஏ. எஸ். மொஹமட், பி. என். றஷீட் ஆகியோர் தலைவராக இருந்திருக்கின்றனர்.

1991 இல் நாட்டின் நிருவாக முறை பன்முகப்படுத்தப்பட்டதுடன் முழு நாட்டிலும் உள்ளூராட்சி முறை திருத்தியமைக்கப்பட்டது.

ஹாரிஸ்பத்துவப் பிரிவு மூன்று உள்ளூராட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

1. அக்குறணைப் பிரதேச சபைப் பிரிவு
2. ஹாரிஸ்பத்துவ பிரதேச சபைப் பிரிவு
3. பூஜாப்பிட்டிய பிரதேச சபைப் பிரிவு

அக்குறணைப் பிரதேச சபைப் பிரிவு முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரிவு ஆகும். 1991 இல் ஏ. எம். எம். சுலைமான் அவர்களும் தொடர்ந்து இசட். ஏ. எம். ஹலிம் அவர்களும் பிரதேச சபைத் தலைவர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

1988 மத்திய மாகாண சபைத் தேர்தலில் எம். எச். எம். ஹலீம் முஹமட் உபைதுல்லாஹ், எம். எஸ். எம். சாபி ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பாராளுமன்றத் தேர்தல்களிலும் அக்குறணை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. 1956 இல் கடுகண்ணாவைத் தொகுதியின் ஒரு பகுதியாக அக்குறணை இருந்தது. 1956 இல் சீ. ஏ. எஸ். மரிக்கார் கடுகண்ணாவைத் தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார்..

1960 ஆம் ஆண்டுகளில் அக்குறணை மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு கட்சியைச் சார்த்து ஒரு முஸ்லீம் பிரதிநிதியை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதையே நோக்கமாகக் கொண்டு அரசியலில் ஈடுபட்டனர். இக்காலப் பகுதியில் மக்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்த கொடை வள்ளல் மீஸான் ஹாஜியார் போன்றோர் இக்மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்தனர்.

1960 இல் அக்குறணைத் தேர்தல் தொகுதியின் பிரதிநிதியாக ஜனாப். ஏ.ஸி. எஸ். ஹமீத் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். 1977 இல் வெளிவிவகார அமைச்சராக நியமனம் பெற்ற இவர் நீதி, உயர்கல்வி அமைச்சராகவும் கடமையாற்றியுள்ளார்கள். அவரது 39 வருட கால பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் போது அக்குறணை பல துறைகளில் சேவைகளைப் பெற்றுக் கொண்டது. தனது ஆரம்பக் கல்வியை அக்குறணையிலும், மாத்தளையிலும் பெற்றுக் கொண்ட ஹமீத் அவர்கள், மாத்தளையில் தனியார் பாடசாலை ஒன்றை நடாத்திக்

கொண்டிருந்த நிலையில் நேரடியாகப் பாராளுமன்ற அரசியலில் புகுந்தவராவர். அண்மைக்காலம்வரை இலங்கை அரசியலில் பேசப்பட்டு வந்த இவர் அக்குறணை ஷியா அரசினர் வைத்தியசாலையின் முன்னேற்றம், பாடசாலைகளின் அபிவிருத்தி, என்பவற்றில் தனது தடத்தினைப் பதித்துச் சென்றுள்ளார்.

1970 ஆம் ஆண்டளவில் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி கலாநிதி பதீஉத்தீன் மஹ்மூத் அவர்களது தலைமையில் இஸ்லாமிய சோசலிச முன்னணி தோன்றியதோடு, அக்குறணையிலும் அதன் கிளையொன்று ஆரம்பிக்கபபட்டது. இதன் தலைவராக டாக்டர். எம். எஸ். எம். சரூக் அவர்கள் இருந்ததோடு, எம். எஸ். எம். ஜவுபர் செயலாளராக இருந்தார். எச். எம். அப்துல் காதர், எஸ். என். இஸ்மாயில், என். எம். ஏ. முஹம்மது, என். எம். எச். முஹம்மது, எஸ். எச். எம். மர்ஜான், ஐ. எல். எம். ரஷீட், எச். எம். எம். ஸித்தீக், ஏ. எச். எஸ். மொகமட், இசட். ஏ. எம். ஹலிம், எம். எம். வஹாப், எம். எஸ். எம். ஹாஷீம் முதலியோர் ஆரம்பகால அங்கத்தவர்களாக இருந்தனர்.

இக்கட்சிக்குப் பகிரங்க ஆதரவு இல்லாத போதும், அக்குறணை அரசியலில் எதிரணி ஒன்று உருவாகியது. 1974 இல் எச். எம். ஸித்தீக் அவர்களது தலைமையில் லங்கா சமசாஜக் கட்சியின் கிளை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதல் 1974 இல் மேதின ஊர்வலத்தில் அக்குறணை மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடக் கூடியதாகும்.

இக்காலப் பகுதியில் அக்குறணையின் அரசியலில் அடியெடுத்து வைத்த டாக்டர். எச். எம். மஹ்றூப் அவர்கள் அக்குறணை மண்தந்த முதலாவது டாக்டர் என்ற பெருமைக்கு உரித்தானவராவார். இவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஹாரிஸ்பத்துவைத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்டமையும், மக்களின் நன்மதிப்பைப் பெற்றமையும் குறிப்பிடாதிருக்க முடியாததொன்றாகும். அன்னாரின் அரசியல் சமூக சேவைகள் இப்பகுதி மக்களுக்குக் குறைவறாது கிடைத்து வருகின்றது.

1994 இல் முஸ்லிம் காங்கிரஸ் உதயமாகியதுடன், அதன் செல்வாக்கும் அக்குறணையிலும் ஏற்பட்டது. எம். உபைதுல்லாஹ் அவர்கள் முஸ்லீம் காங்கிரஸின் பிரதிநிதியாக மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடக் கூடியதொன்றாகும். அல்ஹாஜ் என். எம். புஹாரிதீன் அவர்கள் முஸ்லீம் காங்கிரஸின் நியமன அங்கத்தவராக பாராளுமன்றம் சென்றார்.

என். எம். புஹாரிதீன் அவர்கள் அக்குறணை தந்த பிரபலமிக்க தொழிலதிபராவர். "பெயர்லைன்" என்ற ஆலவிருட்ச ஸ்தாபனத்தின் அதிபரான இவர் இப்பகுதி மக்களுக்கு தொழில் வாய்ப்பளிப்பதற்காகவென்றே தனது தொழில் ஸ்தாபனத்தில் ஒன்றை அக்குறணையில் நிறுவினார். பாராளுமன்ற அங்கத்தவரான இவர் கண்டி பதிஉத்தீன் மஹ்மூத் பெண்கள் பாடசாலைக்கு

மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றைத் தன் சொந்தச் செலவில் கட்டிக் கொடுத்தவராவார்.

அக்குறணையைச் சேர்ந்த சிலர் வெளியூர்க்ளில் அரசியலில் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடக் கூடியதாகவுள்ளது. அல்ஹாஜ். எஸ். அப்துல் மஜீட் அவர்கள் பொலநறுவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே போன்று தமண்கடுவை பிரதேச சபைத் தலைவராக எஸ். எம். எம். இஸ்மாயில் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கண்டி மாநகர சபையின் உதவி நகர பிதாவாக ஜனாப். ஜி. என். எஸ். ஹமீட், ஜனாப். இசட். ஏ. எம். ராஸிக் அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சேர். ராஸீக் பரீத் போன்றோரின் வழிகாட்டலில் தொடங்கிய அக்குறணையின் அரசியல் பாதை, தமக்கென பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்களையும் தலைவர்களையும் கண்டதுடன், இன்று பல தேசிய கட்சிகளையும், அரசியல் சித்தாந்தங்களையும் பின்பற்றும் தேசிய அரசியல் நீரோட்டத்துடன் சேர்ந்துள்ளமையைக் காணலாம்.

## அக்குறணையின் குடிப்பரம்பலும் சமூக கலாசாரப் பண்புகளும்

அக்குறணை ஒரு பெரும் முஸ்லீம் குடியேற்றமாகும். வடக்கே அலவத்துக்கொடையிலிருந்து தெற்கே குடுகலை வரையிலும், மேற்கே பூஜாப்பிட்டியிலிருந்து கிழக்கே தீகலை வரையிலும் இம்முஸ்லிம்கள் நெருக்கமாக வாழ்கின்றனர். தனித்தனி முஸ்லிம்களைக் கொண்ட பகுதியாக இருப்பதினாலும், கலாசாரத் தன்மையினால் சுற்றாடலில் உள்ள பகுதிகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதாலும் இப்பகுதியை ஒரு தனி கலாசாரக் கூறாகக் (Cultural Unit) கொள்ளலாம். உணவு, உடை, வீடமைப்பு, சமயம், மொழி, பழக்க வழக்கங்கள் முதலிய சகல அம்சங்களிலும் அக்குறணை சூழவுள்ள பகுதிகளிலிருந்து வேறுபட்ட தன்மைகளைக் கொண்டு காணப்படுகின்றது. இவ்வாறான வேறுபாடுகள் காணப்பட்ட போதும் குடியேற்றம் ஏற்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை இங்குள்ள முஸ்லிம்கள் சூழவுள்ள பிரதேச மக்களோடு ஒற்றுமையாகவும் இணக்கமாகவும் வாழ்ந்து வருவது குறிப்பிடக்கூடியதொரு அம்சமாகும்.

அக்குறணை முஸ்லிம்களது மத, கலாசாரத்தன்மைகளை நோக்கும்போது, மத அடிப்படையில் இலங்கையில் உள்ள ஏனைய முஸ்லிம்களோடும் உலகிலுள்ள ஏனைய முஸ்லிம்களோடும் ஒன்றிணைந்து காணப்படுகின்றனர். இஸ்லாமியக் கோட்பாடுகள், தொழுகை, ஸகாத்து, நோன்பு, ஹஜ்ஜு என்பவற்றிலும் இவ்வொற்றுமை காணப்படுகின்றது. அக்குறணை முஸ்லீம்கள் மார்க்கக் கடமைகளில் ஆழ்ந்த ஈடுபாடுடையவர்களாகக் காணப்படுகின்றனர். நீண்ட காலமாக மார்க்க அறிஞர்களது போதனையை அப்படியே ஏற்றுக் கொள்பவர்களாகக் காணப்பட்ட இம்மக்களிடையே, அண்மைக் காலத்தில் ஆராய்ச்சிகள், கலந்துரையாடல்கள், வினாவிடை மூலம் உண்மையான இஸ்லாமியக் கருத்துக்களை அறிந்து ஏற்றுக் கொள்ளும் தன்மை ஏற்பட்டுள்ளது.

கலை, இலக்கியத் துறைகளை நோக்கும் போது பலருடைய பங்களிப்பைக் காணக் கூடியதாகவுள்ளது. ஹிஜ்ரி 1247 இல் பிறந்த "கசாவத்தை ஆலிம் அப்பா" என அழைக்கப்படும் அஷ்ஷெய்கு முஹம்மது அவர்கள் பல அரபு நூல்களையும், அரபுத் தமிழ் நூல்களையும் இயற்றியுள்ளார். அன்னார் இயற்றிய "வித்துரியா" என்ற அரபுக் கவிதைத் தொகுப்பு, அஷ்ஷெய்க் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்களின் பெயரால் இயற்றப்பட்டதாகும். கசாவத்தை ஆலிம் அப்பா இயற்றிய "தீன் மாலை", அரபுத் தமிழ் இலக்கியத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. அவர்களது பேரனான அஷ்ஷெய்க் ஸயீத் (ஸவ்லதி) அவர்கள் கவிதைகள் இயற்றுவதில் திறமை பெற்றுக் காணப்பட்டார். ரி.எம் ஸாஹுல் ஹமீத் அவர்கள் பல கவிதைகளை இயற்றியுள்ளார். இவை கீத போதனா ரஞ்சிதம் என்னும் நூலாக வெளிவந்துள்ளன. நீரெல்லையைச் சேர்ந்த ஏ. என். எம். இஸ்மாயில் லெப்பை மெஞ்ஞானத் திருப்புகழ், தௌகீதுப் புராணம், என்னும் நூல்களை

இயற்றியுள்ளார். இக்காலத்தில் அஷ்ஷெய்ஹ். எம். ஏ. எம். மன்சூர் (B.A.Hon) ஒரு சிறந்த எழுத்தாளராக விளங்குகின்றார். மத்திய மாகாண முஸ்லிம் கலாசார அமைச்சினால் மீரா சாஹிப் அப்துல் அஸீஸ், "கலைச்சுடர்" என்னும் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர். கலைச்சுடர் மீரா ஸாஹிப் அப்துல் அஸீஸ் ஒரு பாடகர் ஆவார். 1970 ஆம் ஆண்டு முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலியில் இஸ்லாமியப் பாடல்களைப் பாடி வந்துள்ளார்.

அக்குறணை ஸக்கரிய்யா பத்திரிகைத் துறையுடன் தொடர்பு கொண்டு ஒரு எழுத்தாளராகக் காணப்படுகின்றார்.

சஹாப்தீன் குறிப்பிடக் கூடிய ஒரு எழுத்தாளர் ஆகும். மௌலவி. ஏ. எல். எம். நயீம் அவர்கள் 'அல் - ஜஸாஉ' என்னும் மார்க்க நூலை எழுதியுள்ளார்.

அக்குறணை பல கிராமங்களைக் கொண்ட ஒரு பகுதியாகும். இக்கிராமங்கள் அனைத்தும் இன்று போக்குவரத்துப் பாதைகளால் இணைக்கப்பட்டுள்ளன. 1950 க்கு முன் அக்குறணை மக்களின் போக்குவரத்து நடைபாதைகளையே அடிப் படையாகக் கொண்டிருந்தது. கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் போக்குவரத்து, மின்சாரம், நீர் விநியோகம், போன்ற துறைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணலாம். ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிவாசல்களும், பாடசாலைகளும் அமைந்துள்ளன. இதன் காரணமாக இன்று அக்குறணை எங்கும் மக்கள் மிகவும் அடர்த்தியாக வாழ்கின்றனர். சதுர மைலுக்கு 5000 பேர்களுக்கு மேல் குடியடர்த்தி காணப்படுகின்றது. இவ்வாறு குடியடர்த்தி கூடுதலாகக் காணப்படுவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு.

அக்குறணைப் பகுதி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருப்பதால் அப்பகுதி முஸ்லிம்கள் அக்குறணைப் பகுதிகளிலிருந்து வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்று வாழ விரும்புவதில்லை. அத்துடன் கண்டிப் பகுதியைச் சூழவுள்ள பல கிராமங்களில் இருந்து மக்கள் இங்கு வந்து குடியேறியுள்ளனர். நீண்ட காலமாக அக்குறணை மக்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களாக்க காணப்படுவதினால், இப்பகுதி ஓரளவு செல்வந்தர்களைக் கொண்டும் காணப்படுகின்றது. வெளிக் கிராமங்களிலிருந்து பலர் தொழில் வசதி நாடியும் இங்கு வந்து குடியேறியுள்ளனர். அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணம், மன்னார் முதலிய பகுதிகளில் ஏற்பட்ட வன்முறை காரணமாக குடிபெயர்ந்த மக்களிற் சிலர் அக்குறணையைச் சூழவுள்ள பகுதிகளில் குடியேறியுள்ளனர். ஒரு சிறு தொகைத் தமிழரும் இங்கு குடியேறியுள்ளதைக் காணலாம். மேலும், பிறப்பு வீதமும் ஏனைய சமூகங்களை விடக் கூடதலாயுள்ளது. இவ்வாறான காரணங்களால் அக்குறணை சனத்தொகை கூடிய ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது.

அக்குறணை முஸ்லிம் கிராமங்களின் மொத்தச் சனத்தொகை 32, 000 ஆகும். அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிங்களக் கிராமங்களிலும்

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அக்குறணையிலுள்ள மொத்த முஸ்லிம் குடும்பங்கள் ஏறக்குறைய 7500 ஆகும். சாதாரண ஒரு குடும்பம் 4 - 5 பேரைக் கொண்டதாக உள்ளது. தெலும்புஹுகவத்தை மிகக் கூடிய குடித் தொகையையும் (2650) மாவத்துப்பொல குறைந்தளவு (423) முஸ்லிம்களையும் கொண்டுள்ளது. அக்குறணையைச் சேர்ந்து காணப்படுகின்ற சிங்களக் கிராமங்களில் பதினேழாயிரத்துக்கு (17,000) மேற்பட்ட பௌத்த மக்கள் வசித்து வருகின்றனர். அக்குறணை செயலாளர் பிரிவிலுள்ள முஸ்லிம், பௌத்த மக்களது மொத்தக் குடித்தொகை 55,000 ஆகும். இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணை அக்குறணை கிராம செயலாளர் பிரிவிலுள்ள குடித்தொகையைக் காட்டுகின்றது.

ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கு அக்குறணை நகருக்கு வருகின்றனர். கட்டிட வேலைகளுக்காகவும் ஏனைய தொழில்களுக்காகவும் பெருந்தொகையானோர் இங்கு வருவதைக் காணலாம்.

கண்டி மாத்தளை பிரதான பாதையில் அமைந்துள்ளமையால் ஒரு வர்த்தக மையமாகவும் அக்குறணை விளங்குகின்றது. அண்மைக் காலம்வரை அக்குறணையில் ஒரு பெரும் ஆடை உற்பத்தித் தொழிற்சாலை அமைந்திருந்தது. கின்றது. இதில் ஆயிரக்கணக்கான பெண்கள் வேலை செய்து வந்தனர். இன்று வாகன விற்பனை, வாகனப் பழுதுபார்ப்புத் தொழில் அக்குறணையில் பிரபல்யம் அடைந்துள்ளது. இலங்கையில் பல பிரதேசங்களிலிருந்தும் அக்குறணைக்கு வர்த்தக நோக்கில் பலர் வருகின்றனர். அரசாங்க வைத்தியசாலை, அக்குறணை பிரிவு செயலாளர் அலுவலகம் என்பவற்றுக்கும் பலர் வருகின்றனர்.

நாளொன்றுக்கு இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் நடமாடும் இடமாக அக்குறணை நகர் விளங்குகின்றது. எனவே, இந்நகர் பல சமூகத் தேவைகளை வேண்டி நிற்கின்றது. பொதுமக்கள் இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் குடிநீர் வசதியோ அல்லது ஓய்வு பெற வசதியோ இங்கில்லை. அடிப்படைத் தேவையான பொது மலசலகூட வசதி கூட இங்கில்லாமல் இருப்பது கவலைக்குரியதொன்றாகும். சுருக்கமாகக் கூறின், ஒரு நகருக்குரிய பொது வசதிகள் அக்குறணைக்குத் தேவையாக உள்ளன. ஆனால், ஒரு கிராமத்திலுள்ள வசதியாவது அக்குறணையில் இல்லையென்று கூறலாம். கழிவு நீர் இடத்துக்கிடம் தேங்கிநிற்பது. குப்பை கூழங்கள் பாதையயோரமாகக் குவித்து வைக்கப்பட்டுள்ளமை. பழைய வாகன உதிரிப் பாகங்கள், நெருக்கமான பெட்டிக் கடைகள், மர ஆலைகள், அழுக்கடைந்த ஆறு, ஒழுங்கில்லாமல் வாகனங்கள் நிறுத்தப்படுவது: முதலியன அக்குறணைச் சூழலை மாசடையச் செய்கின்றன.

| அக்குறணை கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் பரம்பல் | | | | | |
|---|---|---|---|---|---|
| கிராம சேவையாளர் பிரிவு | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் | ஏனை. | மொத்தம் |
| 1. புளுகொஹதென்னை | 0 | 45 | 1982 | 0 | 2027 |
| 2. கசாவத்தை | 54 | 15 | 1954 | 0 | 2023 |
| 3. உடவெலிகெட்டிய | 4 | 18 | 2265 | 0 | 2287 |
| 4. பல்லேவெலிகெட்டிய | 0 | 0 | 1605 | 0 | 1605 |
| 5. தொடங்கொல்லை | 8 | 56 | 2541 | 0 | 2005 |
| 6. அக்குறணை | 0 | 0 | 2280 | 0 | 2280 |
| 7. தெலும்புகஹவத்தை | 30 | 50 | 2650 | 0 | 2730 |
| 8. வராகஸ்ஹின்னை | 0 | 8 | 1642 | 0 | 1650 |
| 9. நீரல்லை | 0 | 22 | 1939 | 0 | 1961 |
| 10. மேல்சேன | 18 | 10 | 1202 | 0 | 1230 |
| 11. மல்வானஹின்னை | 20 | 50 | 1778 | 0 | 1848 |
| 12. குருகொடை | 3 | 0 | 1730 | 0 | 1733 |
| 13. ஹுரிகொல்லை | 7 | 16 | 1613 | 0 | 1636 |
| 14. தெல்கஸ்தென்னை | 5 | 24 | 1513 | 0 | 1542 |
| 15. பங்கொள்ளாமடை | 36 | 10 | 1074 | 0 | 1120 |
| 16. மல்கமன்தெனிய | 325 | 327 | 477 | 0 | 1129 |
| 17. ரத்துகொஹோ | 147 | 11 | 1373 | 0 | 1531 |
| 18. தீகலை | 702 | 54 | 0 | 0 | 756 |
| 19. பல்லேத்கலைதுனுவிலை | 787 | 0 | 0 | 0 | 787 |
| 20. துனுவில | 1622 | 0 | 0 | 0 | 1622 |
| 21. மாவத்துப்பொலை | 1435 | 40 | 423 | 0 | 1898 |
| 22. கொனகலகலை | 1024 | 15 | 62 | 0 | 1101 |
| 23. மாரஹலை | 912 | 0 | 0 | 0 | 912 |
| 24. அலவத்துக்கொடை | 1883 | 701 | 144 | 5 | 2733 |
| 25. அரம்பேபொலை | 702 | 26 | 302 | 0 | 1030 |
| 26. பலகடுவை | 654 | 45 | 46 | 0 | 745 |
| 27. திப்பிட்டிய | 1088 | 0 | 66 | 0 | 1154 |
| 28. வலஹேனை | 412 | 6 | 392 | 0 | 810 |
| 29. தெல்கஹகொடை | 870 | 418 | 22 | 0 | 1310 |
| 30. விலானை உடகம | 1121 | 355 | 3 | 0 | 1479 |
| 31. ரம்புக்கேஎல | 587 | 92 | 1078 | 0 | 1757 |
| 32. விலானைபல்லேகமை | 1366 | 154 | 0 | 0 | 1520 |
| 33. குருந்துகஹஎல | 12 | 46 | 1226 | 0 | 1284 |
| 34. கொனகலகல | 1255 | 0 | 0 | 0 | 1255 |
| 35. உக்கல | 192 | 3 | 1206 | 0 | 1401 |
| | 17281 | 2617 | 34588 | 5 | 54491 |
| | 37.7 | 4.8 | 63.5 | 0.0 | 100.0 |

## அக்குறணை முஸ்லிம்களின் கல்வி வரலாறு

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு அச்சமூகத்தின் கல்வி வரலாறு ஒரு சிறந்த அளவுகோலாகும். அவ்வகையில் அக்குறணை முஸ்லிம்களின் வரலாற்றை மதிப்பீடு செய்வதற்கு எமது கல்வி வரலாற்றை அறிவது இன்றியமையாததாகும்.

அக்குறணை முஸ்லிம்கள் தமது அரசியல் பொருளாதார வளர்ச்சியில் கவனஞ் செலுத்தியதைவிட குறைந்தளவு கல்வியில் செலுத்தி வந்துள்ளதை அவர்களது கல்வி வரலாறு உணர்த்தி நிற்கின்றது. 'அக்குறணை' என்ற சொல்லே 'அல்குர்ஆன் ஓதல்' என்ற சொல்லை அடியொட்டிப் பிறந்தது என்ற கூற்றுக்கேற்ப அக்குறணை மக்கள் சமயக் கல்விக்கு கூடிய மதிப்பளித்துள்ளனர். எனினும், இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றோடு அக்குறணை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றை ஒப்பிடுகையில் என்றும் அக்குறணை முஸ்லிம்களின் கல்வித் தகைமை கூடியதாகவே காணப்படுகின்றது.

அக்குறணை என்ற பெயர் கல்வியோடு தொடர்புபட்டதாகவே உள்ளது. முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்த இப்பகுதியை பார்வையிட வந்த சிங்கள மன்னன் பல குர்ஆன் மத்ரஸாக்கள் இயங்குவதைக் கண்ணுற்றான். அவை என்னவென்று கேட்டபோது 'அல்குர்ஆன்' படிப்பிக்கும் இடம் எனக் கூறப்பட்டது. ஆகவே, அந்த இடத்தை அல்குர்ஆன் என அரசன் அழைத்தான். அச்சொல் மருவி அக்குறணை என்று வந்ததாகவே பெரும்பாலும் கருதப்படுகிறது. இதை ஊர்ஜிதப்படுத்தும் இன்னொரு சம்பவம் உண்டு. தனது பரிவாரங்களுடன் அல்குர்ஆன் ஓதும் இடத்தைத் தாண்டிச் சென்ற அரசன் மற்றையவர்களைப் போலன்றித் தொப்பி முதலிய உடுப்புக்களுடன் இருந்த சிலரைக் கண்டு அவர்கள் யார் என வினவினான். அவர்கள் குருமார் எனக் கூறப்பட்டது. அதிகமான குருக்கள் என்ற பொருளில் 'குரு கொடக்' என அரசன் குறிப்பிட்டுள்ளான். ஆகவே அந்த இடத்துக்கு குருகொட என்ற பெயர் வழங்கலாயிற்று. இந்த இரு பெயர்களையும் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது அக்குறணை என்ற இடத்தில் நடந்த மத்ரஸாக்களில் குருகொடையைச் சேர்ந்த பலர் கற்றனர் எனக் கொள்ள முடிகின்றது. அக்குறணை மக்கள் சமயக் கல்விக்கு முக்கியம் கொடுத்த உண்மை இங்கு மனம் கொள்ளத்தக்கது. அக்குறணை 'சிறுமக்கம்' என்று பெருமையோடு மக்கள் பேசிக்கொள்ளும் அளவுக்கு மார்க்கத்தைக் கற்ற பலர் இங்கு அப்போது இருந்தனர். 1888 இல் அரபு கற்பிக்கும் ஒரு சிறிய பாடசாலை அக்குறணையில் இருந்ததாக பிரித்தானிய நிருவாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்ப காலங்களில் சில இடங்களில் நடாத்தப்பட்ட குர்ஆன் மத்ரஸாக்களும் வீடுகளில் நடாத்தப்பட்ட குர்ஆன் வகுப்புக்களுமே மக்களுக்குக் கல்வியைப் படிக்கக் கூடிய இடங்களாக இருந்தன. குர்ஆனை வாசிக்கவும், மனனஞ்செய்ய வேண்டியவற்றை அவ்வாறு செய்துகொள்ளவும் வைபவங்களில் ஓதும் மவ்லித், துஆ போன்றவற்றை ஓதவும் தெரிந்துகொண்டால் அதுவே ஒருவருக்குப் போதிய கல்வியாகக் கருதப்பட்டது. சில

மூதாட்டிமார் நடத்திய வீட்டு வகுப்புகளிற்கூட இக்கல்வியைப் பெற முடியுமாயிருந்தது. இவ்வாறான வகுப்புக்களை நடத்தியவர்கள் மக்களால் மதிக்கப்பட்டார்கள். 1891 இல் வெளியான முஸ்லிம் நேசன் குறிப்பிட்டவாறு அந்த மத்ரஸாக்களில் வகுப்பு முறையோ பாடத்திட்டமோ இருக்கவில்லை. காலப்போக்கில் ஒவ்வொரு பள்ளியையும் சேர்ந்த மக்கள் ஒரு மத்ரஸாவை ஆரம்பிக்கும் பழக்கம் தோன்றியது. அவற்றிற்கூட மார்க்க அறிஞர்கள் கற்றுக்கொடுக்கும் பழக்கம் மிகப் பிந்தியே ஏற்பட்டது.

அக்குறணையில் பல மத்ரஸாக்கள் நடந்து வந்ததாக முன்னர் குறிப்பிட்டுள்ளோம். ஐரோப்பியர் வருகை அவற்றை அருகச் செய்தது. ஆயினும், 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் அவை மீண்டும் மலர்ந்தன. தனிப்பட்ட அறிஞர்களால் மத்ரஸாக்களை ஆரம்பித்து நடத்த முடியவில்லை. அக்குறணையில் இருந்து இந்தியா போன்ற இடங்களுக்கு அல்லது நம் நாட்டின் மற்றைய பகுதிகளுக்குச் சென்று மார்க்க அறிவைப் படித்தவர்கள் பெரும்பாலும் பொருளாதார நிலையில் குறைந்தவர்களாக இருந்ததே இதற்குக் காரணமாகும். ஆகவே, திட்டமிட்ட முறையில் குர்ஆன் மத்ரஸாக்கள் இயங்குவது கஷ்டமாகவே இருந்தது.

மார்க்கக் கல்வியை, அரபு மொழியைப் படிப்பித்த கல்விக்கூடங்கள் அக்குறணையில் மிகக் குறைவாகவே இருந்தன. சித்திலெப்பை கூட மார்க்க அறிவை அக்குறணையில் படித்தார் எனில் பள்ளிவாசல்களில் அல்லது வீடுகளில் தரமான ஓரிரு அரபு மத்ரஸாக்கள் நடந்ததாக நாம் கொள்ள வேண்டும். அக்குறணையில் அன்றிருந்த உலமாக்களிற் பெரும்பாலானோர் வெளியூர்களில் அல்லது இந்தியாவில் ஓதியவர்களே. அக்குறணையின் முதலாவது அரபு மத்ரஸா 1971 இல் ஆரம்பிக்கப்பட்ட ரஹ்மானியா மத்ரஸாவாகும். அதனை ஆரம்பித்துவைத்த மௌலவி எச். எம். எம். ஹாலித் அவர்கள் எமது கல்வி வரலாற்றில் இடம்பெற வேண்டியவர். அதனைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட குருகொடை மீஸான் மத்ரஸாவும், பெண்களுக்காக இன்று குருகொடையில் அமைக்கப்பட்டு வரும் மத்ரஸாவும் மார்க்கக் கல்விப் பணியில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றன.

அக்குறணை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று சமய ரீதியான கல்வி மற்றது பொதுக்கல்வி.

சமயக் கல்வி பெரும்பாலும் தமது மார்க்கக் கடமைகளை அறிந்து பிழையற நிறைவேற்றுவதையே நோக்கமாகக் கொண்டது. பொதுக் கல்வி தொழில் வாய்ப்புக்களை மையமாகக் கொண்டது. ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் சமயக் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண் மீதும் கல்வி கட்டாயமானது என்ற நபி மொழிக்கேற்ப ஆரம்ப காலம் முதலே தமது ஆத்மீகக் கல்விக்கே அக்குறணை முஸ்லிம்கள் முக்கியத்துவம் கொடுத்து தமது சிறார்களை மத்ரஸாக்களுக்குக் கட்டாயம் அனுப்பி வைத்தனர். ஆத்மீக கல்விக்கு

முக்கியத்துவம் கொடுத்து தமது சிறார்களை மத்ரஸாக்களுக்கு கட்டாயமாக அனுப்பிவைத்தனர். ஆத்மீக கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவம் உலகியற் கல்விக்குக் கொடுக்கப்படாததால் முஸ்லிம்கள் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுகையில் கல்வித் துறையில் பின்தங்கியவர்களாகவே காணப்பட்டனர். பொதுவாக நாட்டின் ஏனைய பகுதி முஸ்லிம்களின் நிலைமையும் இதுவே. பிரித்தானியர் வருகையோடு நாடெங்கிலும் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் ஆதிக்கத்திலேயே கல்விக் கூடங்கள் இருந்ததால் தமது சிறார்களை அப்பாடசாலைகளுக்கு அனுப்புவதால் அவர்களது மத கலாசார பாரம்பரியம் பாதிக்கப்படலாம் என்ற பயமும் அப்படியான பிரசாரமும் இதற்கு முக்கிய காரணமாகும். இந்திய முஸ்லிம்களின் கல்வி வரலாறும் இதுவே.

அக்குறணை முஸ்லிம்களின் மார்க்கக் கல்வி வரலாற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம் ஒன்று குர்ஆன் மத்ரஸாக் கல்வி. மற்றது அரபு மொழி மத்ரஸாக் கல்வி. மிக நெடுங்காலமாக குர்ஆன் மத்ரஸாக் கல்வியுடனேயே அக்குறணை முஸ்லிம்கள் கல்வி நின்று விட்டது.

ஆரம்ப காலத்தில் குர்ஆன் மத்ரஸாக்கள் பெரும்பாலும் வீடுகளில் தனிப்பட்டவர்களாலேயே நடாத்தப்பட்டு வந்துள்ளது. குர்ஆன் மத்ரஸாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வயதிலேயே பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். வயதெல்லையோ, வகுப்பு வரையறைகளோ கிடையாது. குர்ஆனைப் பிழையற ஓதக் கற்றுக் கொள்ளும் வரை மத்ரஸா செல்வர்.

மத்ரஸாக்களுக்கு பிள்ளைகளைச் சேர்க்கும் போதும். குர்ஆனில் பிரிவுகளை (ஜுஸ்வுகளை) ஆரம்பிக்கும் போதும் லெப்பைக்கு (குர்ஆன் ஆசிரியர்) கொடுக்கும் ஹதியாவைத் தவிர வேறு குறிப்பிட்ட கட்டணம் ஏதும் கிடையாது.

குர்ஆன் மத்ரஸாக்களுக்கென வரையறுக்குட்பட்ட பாடத்திட்டம் ஏதும் இருக்கவில்லை. பொதுவாக குர்ஆன் ஓதுவதோடு, தொழுகையின் சட்ட திட்டங்களும், தொழுகையுடன் சம்பந்தப்பட்ட ஓதல்களும் துஆக்களும் சுருக்கமாக ஈமான் இஸ்லாம் தொடர்பான கல்வியும் கற்பிக்கப்பட்டன. மேலதிகமாக ஆண் பிள்ளைகளுக்கு சுப்ஹான மௌலித், ஹஸீததுல் புர்தா போன்றவையும், பெண் பிள்ளைகளுக்கு தலைப்பாத்திஹாவும், சொல்லிக் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடலாம். கந்தூரி வீடுகளில் சுப்ஹான மௌலித் வைபவங்களில் நன்றாக மௌலித் ஓதக் கூடிய பிள்ளைகள் பாராட்டப் பட்டனர். இதுவே எமது ஆரம்பகால குர்ஆன் மத்ரஸாக்களின் நிலை.

19 ஆம் நூற்றாண்டு கடைசிப் பகுதியிலிருந்து எமது குர்ஆன் மத்ரஸாக்களில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டன. தனிப்பட்டவர்களால் வேதனமின்றி வீடுகளில் நடாத்தப்பட்ட மத்ரஸாக்கள் படிப்படியாக பொது இடங்களுக்கு மாற்றப்பட்டன. சில இடங்களில் பள்ளிவாசல்களிலும், சில இடங்களில் மாலை வகுப்புக்களாகவும்,

வேறு சில இடங்களில் அதற்கென்றே கட்டப்பட்ட கட்டிடங்களிலும் மத்ரஸாக்கள் நடாத்தப்பட்டது. பொதுவாகப் பள்ளிவாசல்களில் நடாத்தப்பட்ட மத்ரஸாக்கள் பள்ளிவாசலின் கீழ் வந்தன. பள்ளிவாசல் இமாமின் அல்லது முஅத்தினின் ஒரு பகுதிநேர தொழிலாக அல்லது மேலதிக வருமானத்திற்கான தொழிலாக மத்ரஸா நடாத்தப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளிடமிருந்து ஒரு சிறு கட்டணமும் அறவிடப்பட்டது. இன்றேல் பள்ளிவாசல் நிருவாகம் அல்லது தனிப்பட்டவர்களால் லெப்பைக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது. லெப்பைக்குச் சம்பளம் கொடுக்கப்படாமல் மத்ரஸாக்கள் கைவிடப்பட்ட சந்தர்ப்பங்களும் கிராமங்களில் அடிக்கடி ஏற்பட்டன. ஆங்காங்கே பொதுவாக ஏனைய டியூசன் (Tutory) ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் வேதனத்துடன் ஒப்பிடுகையில் குர்ஆன் கற்பிக்கும் லெப்பையின் சம்பளம் (ஹதியா) மிக மிகக் குறைவாக இருப்பது வேதனைக்குரியது. இன்றுவரை நிலைமை அதுவே.

எமது மதக் கல்வி வரலாற்றில் அடுத்த முக்கிய கட்டம் அரபு மத்ரஸாக்கள் ஆரம்பிக்கப்பட்டதாகும். பொதுவாக 19 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் மகரகம, காலி போன்ற பகுதிகளில் அரபு மத்ரஸாக்கள் ஆரம்பிக்கப்படும் வரை இலங்கையில் குறிப்பிடத்தக்க மத்ரஸாக்கள் இருந்ததாகத் தெரியவில்லை. பொதுவாகத் தென்னிந்திய மத்ரஸாக்களில் ஓதிய அறிஞர்களே நம் நாட்டில் ஆங்காங்கே காணப்பட்டனர். நகர்ப்புறங்களில் தென்னிந்திய உலமாக்கள் இமாம்களாகக் கடமையாற்றி எமது ஆத்மீக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்ததை நாம் நன்றியுணர்வோடு குறிப்பிட வேண்டும்.

19 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலிருந்து அரபு மத்ரஸாக்கள் நம்நாட்டில் ஒவ்வொன்றாக ஆரம்பிக்கப்பட்டன. கிட்டத்தட்ட காலி, மஹரகம மத்ரஸாக்கள் ஆரம்பிப்பதற்கு சற்று முன்னதாக அக்குறணையில் வாழ்ந்த கசாவத்தை ஆலிம் சாஹிப் அவர்களால் தனிப்பட்ட முறையில் ஒரு அரபு மத்ரஸா நடாத்தப்பட்டதாகவும், நாட்டின் தூரப்பகுதிகளிலிருந்து கூட மாணவர்கள் அக்குறணைக்கு வந்து தங்கியிருந்து அறிவு பெற்றுச் சென்றதாகவும், அறியக்கிடக்கின்றது.

மௌலவி நுஃமான் அவர்களின் கூற்றுப்படி, இலங்கை முஸ்லிம் கல்வியின் முன்னோடி அறிஞர் சித்திலெப்பை, வெலிகம முஸ்தபா ஆலிம், அடுலுகம பாவா லெப்பை ஆலிம், தெலும்புகஹவத்தை ஜமால்தீன் லெப்பை ஆலிம், போன்றவர்கள் கசாவத்தை ஆலிம் அவர்களின் குறிப்பிடத்தக்க சீடர்களாவர்.

கசாவத்தை ஆலிம் அவர்களுக்குப் பிறகு, அண்மைக்காலம் வரை, கிட்டத்தட்ட நூறு வருடங்களாக அரபு மத்ரஸா அமைக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டாலும் 1971 இல் மத்ரஸத்துல் ரஹ்மானிய்யா ஆரம்பிக்கப்படும் வரை அம்முயற்சி கைகூடவில்லை. இவ்விடைக் காலத்தைத் தென்னிந்தியாவில் இருந்து கற்று வந்த உலமாக்களும், காலி பஹ்ஜதுல் இப்றாஹிமிய்யா, மஹரகம கபூரிய்யா, புத்தளம் காஸிமிய்யா போன்ற மத்ரஸாக்களில் கற்று வெளியேறிய

உலமாக்களுக்கும் நிறைவு செய்தனர். இவர்களில் தென்னிந்திய வேலூர் ஜமாலியா அரபிக் கலாசாலையில் பட்டம் பெற்று அக்குறணை மஹகும்புற என்ற இடத்தில் மண்ணாலான மத்ரஸா ஒன்றை ஆரம்பித்து 6 வருடம் சேவையாற்றி பின்னர். பானகமுவ, குருகொட பகுதி மத்ரஸாக்களிலும் கிரமமாகச் சேவையாற்றிய குருகொடையைச் சேர்ந்த அல்ஹாஜ் எச். அப்துல்காதிர் ஆலிம் (ஜமாலி) அவர்களை முன்னோடியாகக் குறிப்பிடலாம்.

அவ்வாறு கற்று வந்த சிலர் இலங்கையின் முக்கிய மத்ரஸாக்களில் உஸ்தாதுகளாகவும், இருந்து வந்துள்ளனர். அத்தகையோரில் காலி பஹ்ஜதுல் இப்றாஹிமிய்யாவில் சுமார் அரை நூற்றாண்டு காலம் அதிபராகக் கடமையாற்றிய அக்குறணையைச் சேர்ந்த அப்துல் ஹமீத் ஆலிம் குறிப்பிடத்தக்கவர்.

## I. மத்ரஸத்துர் ரஹ்மானிய்யாஹ் :-

அக்குறணையின் மதக் கல்வி வரலாற்றில் மத்ரஸத்துர் ரஹ்மானிய்யாஹ் ஆரம்பிக்கப்பட்டது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். குருகொடையைச் சேர்ந்த மௌலவி எச். எம். முஹம்மது ஹாலித் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு சிறு குழுவினரால் இம் முயற்சி ஆரம்பிக்கப்பட்ட போது இதற்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. முதலில் குருகொடை மீஸான் ஹாஜியார் அவர்களால் கட்டப்பட்டு முடிவுறாதிருந்த கட்டிடத்தில் இம்மத்ரஸாவை ஆரம்பிப்பதற்காகத் தீர்மானிக்கப்பட்டு, அக்கட்டிடத்தின் ஒரு பகுதி செப்பனிடப்படும் வேளையில் ஒரு சில காரணங்களால் இது கைவிடப்பட்டது.

பின்னர் அக்குரணை துனுவில ரோட்டில் ஒரு கைவிடப்பட்ட வயல் வெளியில் ஒரு சிறு காணித்துண்டு வாங்கப்பட்டு தற்காலிகக் கொட்டில் ஒன்றில் மிகவும் எளிய முறையில் பத்து பதினைந்து மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்டது. மௌலவி ஹாலித் அவர்களே அதிபராகவும் ஆசானாகவும் இருந்து வந்தார்.

இதற்கான செலவுகளைச் சமாளிப்பதில் மௌலவி ஹாலித் அவர்களும் அவரது குழுவினரும் மிகவும் கஷ்டப்பட்டனர். ஆரம்ப காலத்தில் பாடசாலை ஆசிரியர்களும் சாதாரண மக்களுமே அதன் அபிமானிகளாக இருந்தனர். மத்ரஸத்துர் ரஹ்மானிய்யாஹ் ஒரு சில வருடங்களில் வேகமாக வளர்ச்சியடைந்தது. அண்மையில் மத்ரஸத்துர் ரஹ்மானிய்யாஹ் தனது பொன்விழாவைக் கொண்டாடியது.

பொன்விழாக் கண்ட மத்ரஸத்துர் ரஹ்மானிய்யாஹ்வின் ஆரம்ப கர்த்தா மௌலவி எச். எம். முஹம்மது ஹாலித் பொதுச் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அக்குறணையின் புதல்வன் என்பதற்குச் சான்றாக அவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட வட்டியில்லா வங்கி, தனியார் மருத்துவமனை என்பன விளங்குகின்றன.

## II. *மத்ரஸத்துல் மீஸானிய்யா :-*

*குருகொடை மத்ரஸத்துல் மீஸானிய்யாவின் ஆரம்பம் அக்குறணை அரபு மத்ரஸா வரலாற்றில் முக்கிய அம்சமாகும். 1950 களில் குருகொடையை சேர்ந்த கொடைவள்ளல் மீஸான் ஹாஜியார் (எச். எம். முஹிதீன்) அவர்களால் அரபு மத்ரஸா ஆரம்பிக்கும் நோக்கோடு அவரது சொந்தச் செலவில் இதற்கான கட்டிடங்கள் கட்டப்பட்டன. ஆனால் வேலைகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் இருந்தது. கொடை வள்ளல் எனப் பெயர் பெற்ற மீஸான் ஹாஜியார் பெரும் வர்த்தகராகவும் பெருந்தோட்ட உரிமையாளராகவும் இருந்து இப்பகுதி மக்களுக்கு மட்டுமல்லாது மாவட்டத்தின் அனைத்து முஸ்லிம் கிராமங்களுக்கும் பல கொடைகளைச் செய்து உயிர் நீத்த பின்னர் அண்மையில் அவர்களின் புதல்வர்கள் தம் தந்தையின் மத்ரஸாக் கனவை நனவாக்கினர்.*

*1992, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி குருகொடை மத்ரஸத்துல் மீஸானிய்யா ஆரம்பிக்கப்பட்டது. இங்கு சுமார் 65 மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர். அவர்களுக்கு கல்வி மட்டுமன்றி உணவு, தங்குமிட வசதிகளும் கொடுத்து உபசரிக்கின்றனர் மீஸான் ஹாஜியாரின் புதல்வர்கள்.*

*மீஸான் மத்ரஸாவின் பாடத்திட்டத்தில் குர்ஆன் மனனம் மாத்திரமன்றி ஷரீஆ கல்வியோடு சிங்களம், ஆங்கிலம் உட்பட பரவலான ஒரு கல்வித்திட்டம் அமுல் நடாத்தப்படுவது வரவேற்கத்தக்கது. ஈற்றில் தொழில் கல்வியும் புகட்டப்படவிருப்பதாக அவர்களது பாடத்திட்டம் குறிப்பிடுகின்றது. சுயமாகவும் பொருளாதாரப் பிரச்சினைகளின்றி இயங்குவதாலும், இக்கலாபீடம் துரித வளர்ச்சியடைந்து அக்குறணைக்குப் புகழைத் தேடித் தரும் என எதிர்பார்க்கலாம்.*

## III. *அக்குறணை முஸ்லிம் பெண்கள் அரபுக் கல்லூரி :-*

*மத்ரஸத்துர் ரஹ்மானிய்யாவை ஆரபித்த அல்ஹாஜ் எச். எம். முஹம்மது ஹாலித் அவர்களைத் தலைவராகக் கொண்ட இஸ்லாமிய சேவை இயக்கத்தின் மற்றொரு சாதனையே பெண்கள் அரபுக் கலாசாலை. இதுவரை காலமும் எமது ஊரவர்கள் கல்–எலிய முஸ்லிம் மகளிர் கல்லூரிக்குப் பல கஷ்டங்களுக்கு மத்தியில் தமது பெண் பிள்ளைகளை அனுப்பி வந்துள்ளனர். 1998 ஆம் வருடம் 50 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி தற்போதைக்கு ஒரு தற்காலிக கட்டிடத்தில் இயங்கிய வருகின்றது.*

*நிரந்தரக் கட்டிடத்துக்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காணியைப் பெற்றுக் கொள்வதில் இயக்கம் பெரிதும் உழைத்தது. குருகொடையிலுள்ள ஒரு பொதுக் காணியைப் பெற எடுத்துக் கொண்ட முயற்சி கூடக் கடைசியில் தோல்வி கண்டது. அல்லாஹ்வின் அருளால் இயக்கத்தின் முயற்சி தற்போது வெற்றியளித்துள்ளது என்பதை குறிப்பிடுவது மிக அவசியம்.*

குருகொடையில் காலஞ் சென்ற கலேவெல ஹாமிது லெப்பை அப்துல் மஜீத் ஹாஜியாருக்குச் சொந்தமான சுமார் 1/2 ஏக்கர் காணியை அவரது குடும்பத்தினர் தந்துதவியுள்ளனர். நிரந்தரக் கட்டிடம் அங்கு எழும்பிக் கொண்டிருக்கின்றது.

## பொதுக் கல்வி :

19 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அக்குறணையில் ஆரம்பமாகியுள்ளது. 1907 ஆம் ஆண்டு அக்குறணையில் முதலாவது அரசாங்கப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை அதாவது சுமார் ஒரு நூற்றாண்டு கால பொதுக் கல்வி வளர்ச்சியை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அக்குறணை மக்கள் மிகச் சமீப காலத்திலேயே பொதுக் கல்வியில் ஈடுபாடு காட்டத் தொடங்கினர். சமயக் கல்வியோடு பொதுக் கல்வியும் சம காலத்தில் அளிக்கப்பட்டிருந்தால் ஒரு பெரிய மாற்றம் மக்களிடையே ஏற்பட்டிருக்க முடியும்.

உலகியற் கல்வி அக்குறணையைச் சென்றடைவது தாமதமானதென்றாலும், அக்குறணையின் இளைஞர்கள் பலரும், வெளி இடங்களில் தமது கல்வியை மேற்கொண்டு பல்துறைகளிலும் தங்களின் தடயங்களைப் பதித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பட்டதாரிகள் வரிசையில் முன்னர் கூறிய டாக்டர். மஹ்ருப் அவர்களின் இளைய சகோதரர் எச். எம். இசட், பாரூக் அக்குறணையின் முதலாவது சிவில் சேவை உத்தியோகத்தராவார். இவர் தற்போது ஆஸ்திரேலியாவின் அடலெயிற் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறைத் தலைவராகப் பணிபுரிகின்றார். இவரே இலங்கையின் முதலாவது முஸ்லிம் பதிவாளர் நாயகம் என்ற மதிப்பினையும் பெற்றவராவார். அவரைத் தொடரந்து நிருவாக சேவைக்குத் தெரிவான ஜனாப். முகம்மது ஜிப்ரி அக்குறணை நகரினை இன்று அலங்கரித்து நிற்கும் ஜாமிஉல் அஸ்னா, பள்ளிவாசல் நிருமாணத்தில் முக்கிய பங்கினை மேற்கொண்டு இன்னும் அக்குறணை மக்களில் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றுள்ள ஜே. எம். சயீத் (ஸவ்லதி) அவர்களின் மகனாவார். இவர் இராஜாங்க அமைச்சுச் செயலாளர் பதவியை வகித்து இளைப்பாறியவராவார். இவரைத் தொடர்ந்து குருகொடையைச் சேர்ந்த ஜனாப். ஏ. சீ. எம். ராஸீக் அவர்கள் இன்றும் இலங்கை நிருவாக சேவையில் சமய கலாசார அமைச்சின் மேலதிக செயலாளராக கடமை புரிகின்றார்கள். இலங்கை நிருவாக சேவையில் கடமையாற்றும் நீரெல்லையைச் சேர்ந்த ஜனாப் ஏ. எச். எம். நஸீர் உதவி பிரதேச செயலாளராக உள்ளார்.

இவ்விடைக்காலத்தில் பட்டம் பெற்ற ஜனாப் எம். சரீப், ஜனாப் கபூர், ஜனாப் ஹமீத் மஹ்மூத் போன்றோர் கல்வித் துறையை அலங்கரித்தவர்களாகும்.

## அஸ்ஹர் தேசிய பாடசாலை :

அண்மைக்காலம் வரை அக்குறணை மத்திய கல்லூரி என அழைக்கப்பட்ட இக்கல்லூரி அக்குறணை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றின் ஜீவநாடி. இப்பகுதியில் அமைக்கப்பட்ட முதலாவது அரசாங்கப் பாடசாலை இதுவாகும்.

இப்பாடசாலையின் ஆரம்ப கால வரலாறு பற்றிய தகவல்கள் எழுத்துருவில் கிடைக்காவிடினும் இதன் ஆரம்ப கால மாணவர்கள் பலர் மிக அண்மைக் காலம் வரை எம் மத்தியில் வாழ்ந்து வந்தனர். அதனால் அவர்கள் மூலம் பல தகவல்களைப் பெறக் கூடியதாக இருந்தது. அவர்களுள் இக்கலாசாலையின் முதலாம் இலக்க மாணவரான சுல்தான் லெப்பை முன்னாள் தலைமையாசிரியரும் அதே வகுப்பு மாணவருமான ரி. எம். எஸ். ஹமீத், எம். ஜமால்தீன், பஹிஜி, யூ. அஹமத் ஆசிரியர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள் மூலம் கிடைத்த தகவல்களின்படி அஸ்ஹர் வித்தியாலயம் அக்குறணை 6 ஆம் கட்டையில் 'அரிசி ஸ்டோர்' என அழைக்கப்பட்ட ஒரு கடையில் ஆறு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. திரு. பொன்னையா என்பவர் முதலாவது ஆசிரியர். நாட்டுப் புறங்களில் பாடசாலைகளில்லாத அக்காலத்தில் இப்பாடசாலை ஆரம்பமான வரலாறு பற்றிய பலவித தகவல்கள் கிடைக்கின்றன. அன்றைய அரசாங்க அதிபர் அக்குறணையூடாகப் பிரயாணம் செய்த போது அங்கு கூடியிருந்த மக்களோடு உரையாடியதாகவும், அவர்களது குறை நிறைகளை ஆராய்ந்த போது இரண்டு கோரிக்கைகள் விடுவிக்கப்பட்டதாகவும், அவற்றுள் ஒன்றே இப்பாடசாலை என்றும் மற்றையது பள்ளிவாசலுக்குச் செல்வதற்கான நீரெல்லை ஆற்றின் குறுக்காக ஒரு பாலம் தேவை என்றும் அங்கு குழுமியிருந்தவர்கள் கேட்டுக் கொண்டதாகவும். இதனை ஏற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் காலதாமதமின்றியே அவ்விரண்டையும் நிறைவேற்றிக் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது.

வேறு சிலரின் கூற்றுப்படி தெலும்புகஹவத்தையைச் சேர்ந்த 'புடுவக்காரர்' என்றழைக்கப்பட்ட எழுத வாசிக்கத் தெரிந்த ஒருவரின் வேண்டுகோட்படியே அரசாங்க அதிபர் இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

அகில இலங்கை ரீதியாக நோக்கும் போது, 1905 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஹேறர்பட் கமிசனின் சிபார்சின் படி கிராமப்புறங்களில் பல ஆண்கள் பாடசாலை அமைக்கப்பட்டதாகவும், அதன் விளைவாகவே அரசாங்க அதிபர் அக்குறணைக்கு வந்திருக்கலாமென்றும் கருத இடமுண்டு.

19 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை கிறிஸ்தவ மிஷனரிமாரால் மாத்திரமே நகர்புபுறங்களில் பாடசாலைகள் நடாத்தப்பட்டு வந்தது. ஆனால், 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிரித்தானிய அரசு தமக்குத் தேவையான

பணியாளர்களை மலிவாகப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

இதன் விளைவாக குணானந்த தேரர், அநாகரிக தர்மபாலா, கேணல் ஒல்கொட், போன்றவர்களால் சில பௌத்த பாடசாலைகளும் அராபியாபாஷா அறிஞர் சித்திலெப்பை போன்றவர்களால் ஒரு சில முஸ்லிம் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1900 ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி சுமார் 500 அரச பாடசாலைகளும், சுமார் 1000 உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும், சுமார் 1500 கிறிஸ்தவ பாடசாலைகளும் விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சில முஸ்லிம் பாடசாலைகளும் நாட்டில் இருந்தன. இதே காலப்பகுதியில் எமது கிராமத்திலும் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அக்குறணை 6 ஆம் கட்டையில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1912 ஆம் ஆண்டு எஸ். ஹபீப் லெப்பை என்பவரால் கொடுக்கப்பட்ட ஒரு சிறு காணியில் 7 ஆம் கட்டைக்கு தற்போது பாடசாலை இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது. 1912 ஆம் ஆண்டு இப்பாடசாலையிலேயே கல்வி கற்றுத் தேறிய ஜனாப் ரி. எம். எஸ். ஹமீத் இதே பாடசாலையில் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1918 இல் பொன்னையா ஆசிரியர் இடமாற்றப்பட்டு மட்டக்களப்பைச் சேர்ந்த ஆதம்லெப்பை தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

1926 ஆம் ஆண்டு கின்டெஸ்லி என்ற அரசாங்க அதிபர் அக்குறணைக்கு வந்து ஒரு பெண் பாடசாலை அமைப்பதற்கு முயற்சித்ததாகவும், பெற்றோரின் ஆதரவின்மையால் அது கைவிடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. 1938 ஆம் ஆண்டு மீலாத் விழாவிற்கு அக்குறணைக்கு வந்த சேர். ராஸீக் பரீத் பெண் கல்வியை வலியுறுத்தியதைத் தொடர்ந்து 1942 ஆம் ஆண்டில் குருகொடை பெண்கள் பாடசாலை திறக்கப்பட்டது. இதுவே இப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் பெண்கள் பாடசாலையாகும்.

இக்காலப்பகுதியில் சேர். ராஸீக் பரீத் அவர்களின் முயற்சியால் 1938 ஆம் ஆண்டில் புளுகஹதென்னையிலும், 1940 ஆம் ஆண்டில் மாவதுபொலையிலும் இரு ஆண்கள் பாடசாலைகள் திறக்கப்பட்டன. 1946 இல் அக்குறணை பெண்கள் பாடசாலை திறக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டில் சேர். ராஸீக் பரீத் அவர்களின் சிபார்சின் பேரில் அக்குறணை கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் அதிபராக ஜோர்ஜ் பெரேரா நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஜனாப். வை. எல். எம். மன்சூர் கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபராக நியமனம் பெற்றார். ஜனாப் ரி. எம். எஸ். ஹமீத் தொடர்ந்து பாலர் பாடசாலைத் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

கனிஷ்ட வித்தியாலயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்கள் தொகையும் வேகமாக அதிகரித்தது. இக்காலத்தில் அரசின் கொள்கைக்கேற்ப இப்பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. இடவசதி போதாததன் காரணமாக புதிதாக வேறு இடத்துக்கு பாடசாலையை மாற்றுவதா அல்லது தற்போதைய இடத்திலுள்ள காணியை விஸ்தரிப்பதா என்ற சிக்கலான ஒரு பிரச்சினையைப் பெற்றோர் எதிர்நோக்கினர்.

'இதற்குத் தீர்வு காணும் முயற்சியில் முன்னாள் அக்குறணை கிராமத் தலைவர் ஐ. எல். எஸ். மொஹமட், கிராம சபைத் தலைவர் எச். எம். முஹிதீன், ஜனாப் அபூபக்கர் லெப்பை, எம். ஜமால்தீன் பஹ்ஜி, ஏ. எஸ். நூர் முஹம்மது லெப்பை போன்றவர்களின் அயராத முயற்சியால் பாடசாலைச் சூழலிலுள்ள சில பிரமுகர்கள் காணி வழங்க முன் வந்தனர். அவர்களுள் ஜனாப்களான எம்.சி. எம். மரிக்கார், ஏ. எஸ். நூர் முகம்மது லெப்பை, என். எம். அப்துல் ரஸ்ஸாக் லெப்பை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

புதிதாகப் பெறப்பட்ட காணியில் 1953 ஆம் ஆண்டு 86,000 ரூபா செலவில் ஒரு மண்டபத்தையும், 4 வகுப்பறைகளையும், இரு காரியாலய அறைகளையும் கொண்ட ஒரு கட்டிடமும் கட்டப்பட்டது.

1947 இல் இக்கல்லூரி ஆங்கிலப் பிரிவொன்று தொடங்கப்பட்டது. 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை ஆரம்பக் கல்வியை தமிழ் மொழி மூலமும் 6 ஆம் வகுப்பிலிருந்து மேற்கல்வியை ஆங்கிலத்திலும் கற்கத் தொடங்கினர். எனினும், 1957 இல் அரசின் மொழிக் கொள்கைக்கு ஏற்ப சகல வகுப்புக்களும் தமிழ் மொழி மூலமே இயங்கத் தொடங்கின.

1953 ஆம் ஆண்டில் ஜனாப் ஓ. எல். ஏ. அஸீஸ் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அஸ்ஹர் வித்தியாலயம் மிக வேகமாக முன்னேறியது. இதற்கு ஜனாப் ஓ. எல். ஏ. அஸீஸ் அவர்களின் திறமையான நிருவாகமும் சேவையும் முக்கிய காரணங்களாகும். இக்காலப்பகுதியில் பொதுப் பரீட்சைகளில் திறமையான பெறுபேறுகள் கிடைத்தன. எமது வரலாற்றில் முதன் முதலாக 1959 ஆம் ஆண்டு திசெம்பர் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் எச். எம். முஹம்மது சித்தீக் 1 ஆம் பிரிவில் சித்தியடைந்தார். இதைத் தொடர்ந்து பொதுத் தராதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பல கிடைத்தன.

தொடர்ந்து பொதுத் தராதர, உயர் தர வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் அதிபர் மாற்றம் காரணமாக ஏற்பட்ட சீர்குலைவினால் பல்லைக்கழகப் பரீட்சைக்கு மாணவர்கள் நேரடியாக அனுப் பப்படவில்லை. எனினும், அவ்வகுப்பில் கற்ற பலர் தனிப்பட்ட முறையில் பல்கலைக் கழகம் சென்றனர். இவ்வாறு பல்கலைக்கழகம் சென்றவர்களில் 1961 ஆம் ஆண்டில் எச். எம். எம். முஹம்மது சித்தீக் 1963 ஆம் ஆண்டில் என். முஹம்மது ஹலீம்

125300

போன்றவர்கள் குறிப்படத்தக்கவர்கள். இவர்களது பல்லைக்கழகப் பிரவேசத்தால் பெரிய கல்லூரிகளில் ஆங்கில மொழி கற்றவர்கள் தான் பல்லைக்கழகம் செல்லலாம் என்ற நிலை மாறி எமது கிராமப் பாடசாலையில் கற்றவர்களும் பல்லைக்கழகம் செல்லலாம் என்ற நிலை உருவாகியது. இது கிராம மட்டத்தில் உயர் கல்வித் துறையில் பெரும் விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தியது. சமூக மட்டத்திலும், இது பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. விளையாட்டுத் துறையிலும் அகில இலங்கை மட்டத்தில் வெற்றிகளைப் பெறும் நிலைக்கு அக்குறணை வித்தியாலயம் வளர்ந்தது. 1959 ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலையாக (Senior School) இவ்வித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்டது.

1961 ஆம் ஆண்டைத் தொடர்ந்து கலாநிதி பதிஉத்தீன் மஹ்மூத் கல்வியமைச்சரானதால் பொதுவாக நாடெங்கிலும் ஏற்பட்ட முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சி அக்குறணையிலும் ஏற்பட்டது. இக்காலத்தில் கல்வி அமைச்சர் அல்ஹாஜ். பதிஉத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு இக்கல்லூரியால் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. அவர்கள் எமது வித்தியாலயத்திற்கு ஒரு விஞ்ஞான ஆய்வு கூடத்தையும், ஒரு தொழில் பயிற்சிக் கூடத்தையும் வழங்கினார். 1963 இல் இக்கல்லூரிக்கு வருகை தந்த பிரதமர் மேன்மை தங்கிய சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களால் இவ் விஞ்ஞான ஆய்வு கூடம் திறந்து வைக்கப்பட்டது.

1967 இல் எஸ். எல். எம். ஹனீபா அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் சிறப்பாக நடாத்தப்பட்டு இரண்டு மாணவியர் சர்வகலாசாலை சென்றனர்.

1970 இல் ஜனாப் ஏ. எம். ஏ. கபூர் அதிபராகப் பொறுப்பேற்றார். 1970 ஆம் ஆண்டு சிங்கள மொழியை போதனா மொழியாகக் கொண்ட இரு வகுப்புக்கள் நீண்ட வாத விவாதங்கட்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்டது. இட வசதியின்மையால் பெற்றோரின் உதவிகளைக் கொண்டு அதற்கென்றே இரு வகுப்பறைக் கட்டிடம் ஒன்றும் கட்டப்பட்டது. எக்காலத்திலும் அக்குறணைப் பெற்றோர் கல்விக்காக செலவு செய்வதற்கு ஆயத்தமாக இருந்தனர். புதிய கட்டிடத்தையும் பெற்றோரே கட்டிக்கொடுத்தனர். காலப்போக்கில் சிங்கள ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக சிங்கள மொழி மூல வகுப்புக்களை நிறுத்தவேண்டியேற்பட்டது. கல்வி வளங்களை கூடிய பயன்தரக்கூடிய வகையில் பயன்படுத்த வேண்டும் என்ற கல்விக் கொள்கைகளுக்கிணங்க, இக்காலப்பகுதியில் ஏற்பட்ட முக்கியமானதொரு மாற்றம் அக்குறணையிலுள்ள சிறிய பாடசாலைகள் யாவற்றையும் அஸ்ஹர் கல்லூரியோடு இணைத்தமையாகும். புளுகொஹதென்ன முஸ்லிம் வித்தியாலயம் பங்கொள்ளாமட முஸ்லிம் வித்தியாலயம் தவிர்ந்த, சகல அக்குறணைப் பாடசாலைகளும் அஸ்ஹர் கல்லூரியோடு தொடர்புபடுத்தப்பட்டன. அஸ்ஹர் வித்தியாலயத்தில் 6 ஆம் வகுப்பிற்கு மேலும் ஏனைய சிறிய பாடசாலைகளில் ஒன்றில் இருந்து 5 ஆம் வகுப்பு வரையிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. அக்குறணைப் பாடசாலையில் அதிபர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட



008531

அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, புதிய கல்வி அமைப்பு முறை சீராக நடைபெறுவதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வொழுங்கு சிறப்பாக நடைபெற்றது. அஸ்ஹர் கல்லூரியின் கல்வி வசதிகளை அக்குறணையின் சகல மாணவர்களும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பெருமளவில் நியமிக்கப்பட்டனர். இதனால் பிற்காலத்தில் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறக்கூடியதாயிற்று. என். சீ. ஜீ. பரீட்சைப் பெறுபேறுகள் மிகச் சிறந்து காணப்பட்டன. முஸ்லிம் பாடசாலைகளில் அஸ்ஹர் கல்லூரி முதல் இடத்தை வகித்தது. கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (ஜி. சி. ஈ. (ஓ/ எல்)) இக்காலத்தில் விஞ்ஞான, வணிக துறைகளுக்கு முதன் முதல் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமானதொரு நடவடிக்கை அக்குறணை மத்திய கல்லூரிக்குப் புதிதாகக் காணியைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். முழு அக்குறணைக்கும் உயர் கல்வியை அளிக்கக்கூடியதாக இருந்த ஒரே ஒரு கல்லூரியான அக்குறணை மத்திய கல்லூரிக்கு ஒரு சிறந்த மைதானம் இருக்கவில்லை. இக்குறையை நீக்கும் பொருட்டு அதிபர் காணி எடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார். இம்முயற்சியின் காரணமாக 1980 இல் 2.75 ஏக்கர் (இரண்டே முக்கால்) பரப்புள்ள காணி பெறப்பட்டு இன்றுள்ள மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் அக்குறணை மக்கள் கல்வியில் பெரும் அக்கறை காட்டினர். டாக்டர் எச். எம். மஹ்றூப் அவர்களின் தலைமையில் அக்குறணைக் கல்விச் சபை தாபிக்கப்பட்டு. ஈராக்கிய அரசின் நிதி உதவியோடு வாசிகசாலை ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கான நூல்களும் பெருமளவில் பெறப்பட்டன.

1978 இல் இக்கல்லூரிக்கு அதிபராக வந்த அல்ஹாஜ் வி. எஸ். எம். சுபைர் அவர்கள் ஒரு சிறந்த நிருவாகியாக இருந்ததோடு, கல்லூரியை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். பெற்றோர் ஆசிரிய சங்கத்தை மட்டுமன்றி, பழைய மாணவர் சங்கத்தையும் ஒழுங்குபடுத்தி அவர்களது ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டார். நீண்ட காலத்திற்குப் பிறகு இவரது காலத்தில் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கலைவிழா நிகழ்ச்சிகள் மிகத் தரம் வாய்ந்தவையாகும். ஒரு கல்லூரி சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதில் மட்டும் கவனஞ் செலுத்தாது "மாணவர்களை சகல துறைகளிலும் பயிற்றுவித்து சிறந்த பிரசையாக்க வேண்டும்." என்ற அடிப்படையில் செயலாற்றினார். இவரது காலத்தில் பல கட்டிடங்கள் கட்டப்பட்டன.

1984 இல் எம். வை. எல். அப்துல் கையூம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இக்காலத்தில் அக்குறணைப் பாடசாலைகள் அனைத்தும் 'கொத்தணிப் பாடசாலைகள் நிருவாக முறையின்' கீழ்க் கொண்டுவரப்பட்டன. இவர் அக்குறணை அஸ்ஹர் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய

அதேவேளையில், அக்குறணையிலுள்ள ஏனைய பாடசாலைகளின் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றினார். இக்காலத்தில் ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக அஸ்ஹர் கல்லூரியிலுள்ள வகுப்புக்கள் படிப்படியாக குறைக்கப்பட்டன. இவ்வாறு ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புக்கள் குறைக்கப்பட்டு, ஒன்பதாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புக்கள் மட்டும் இக்கல்லூரியில் இயங்கத் தொடங்கின. ஆரம்பத்தில் பெற்றார் இதன் பாதிப்புக்களை உணரவில்லையாயினும், காலப்போக்கில் ஆறாம் வகுப்பிலிருந்தாவது இங்கு வகுப்புக்கள் நடாத்தப்பட வேண்டுமென குரலெழுப்பினர். அதன் காரணமாக எம். எல். ஏ. சருக் அவர்கள் அதிபராக வந்தபோது (1991-1992) ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மட்டும் கொண்ட ஆறாம் வகுப்பொன்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதிபர் சருக் அவரால் உயர் வகுப்புக்கான விஞ்ஞான ஆய்வுகூட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1 ஆம் மாடி கட்டி முடிக்கப்பட்டது.

1993 இல் எம். ஈ. எம். பாறூக் அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். இக்காலத்தில் கூடைப்பந்து (Basket Ball), கிரிக்கெட் (Cricket) முதலிய விளையாட்டுத் துறைகளில் கூடுதலான ஆர்வம் காணப்பட்டதால், பல போட்டிகளில் அக்குறணை மத்திய கல்லூரி முன்னணியில் நின்றது. இக்காலத்தில் பார்வையாளர் கூடம் (Pavillion) கட்டப்பட்டது. பழைய மாணவரின் உதவியோடு மைதானவோரமாக பாதுகாப்புக் கட்டொன்று போடப்பட்டது.

இக்காலத்தில் சுற்றாடலிலுள்ள சகல மாணவர்களும் பயன்பெறும் வகையில் ஆறாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று மட்டுமல்லாது ஆண்டு ஒன்றிலிருந்தே வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று பெற்றோர், பழைய மாணவர் வேண்டி நின்றனர்.

1997 இல் எம். எம். அப்துல் காதர் அவர்கள் அதிபராகப் பதவியேற்றார். அக்குறணைச் சூழலில் வளர்ந்த இவர் இப்பாடசாலையின் பிரச்சினைகளையும் தேவைகளையும் நன்கறிந்திருந்தார். கல்வித் திணைக்களத்தோடு சிறந்த தொடர்பை ஏற்படுத்தி கல்லூரிக்குத் தேவையான தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொண்டார். பெற்றோரின் வேண்டுகோளை ஏற்று ஆறாம் வகுப்பை விஸ்தரித்து சுற்றாடலில் உள்ள மாணவர்கள், கல்வி பெற வாய்ப்பளித்தார். ஆண்டு ஒன்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இது இவர் செய்த பெரும் பணியாகும். டாக்டர் மஹ்றூப் அவர்களின் ஒத்துழைப்போடு கல்வி அமைச்சர் திரு. ரிச்சட் பத்திரண அவர்களுக்கு சிறப்பான ஒரு வரவேற்பளிக்கப்பட்டது. 1962 இல் பதிஉத்தீன் மஹ்மூத் ஒரு கல்வி அமைச்சராக இப்பாடசாலைக்கு சமுகமளித்து ^25 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு கல்வி அமைச்சர் பரிசளிப்பு விழாவிற்கு வரவேற்கப்பட்டார். அவர் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான கட்டிடங்கள், உபகரணங்களை இக்கல்லூரிக்கு வழங்க உறுதியளித்ததுடன், மாடிக் கட்டிடமொன்றும் கொம்பியூட்டர் உட்பட பல உபகரணங்களும் இக்கல்லூரிக்கு வழங்கப்பட்டன. அக்குறணைக்கு அத்தியாவசியமான பெண்கள் கல்லூரி ஒன்றை

உருவாக்குவதற்கும், அதற்குத் தேவையான காணி ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும், அவர் நடவடிக்கை மேற்கொண்டார். அவருக்குப் பின் அதிபராகக் கடமையாற்றும் அல்ஹாஜ் ரில்வான் அவர்கள் ஆண்டு ஒன்று ஆங்கில மொழி மூல வகுப்பொன்றை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடக்கூடியதொன்றாகும்.

இன்று அக்குறணைப் பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள் இல்லாதிருப்பதுடன் பெரும் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவி வருகிறது. மாணவரிடையே அமைதியின்மை காணப்படுகின்றது. பெற்றோர் போதிய கவனஞ் செலுத்தினால் மட்டுமே இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

## அக்குறணை ஸாஹிராக் கல்லூரி

அக்குறணை மத்திய கல்லூரியினைப் போன்றே கல்வி வரலாற்றில் அக்குறணை ஸாஹிராக் கல்லூரியும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. 1300 க்கு மேற்பட்ட மாணவர்களையும் 49 ஆசிரியர்களையும் கொண்டுள்ள இக்கல்லூரி 2.6.1938 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இக்கல்லூரியில் சேர்க்கப்பட்ட முதல் மாணவன் உமர்தீன் ஆவார். அக்குறணை வரலாற்றிலேயே முதன் முதலில் மாணவிகளை அனுமதித்த பெருமை இப்பாடசாலையைச் சாரும். 03.06.1938 இல் மாணவிகள் அனுமதிக்கப்பட்டனர். இன்று அக்குறணையிலேயே மிகக் கூடுதலான பிள்ளைகளைக் கொண்ட கல்லூரிகளுள் ஒன்றாக உள்ளது.

இக்கல்லூரியின் முதல் அதிபராக ஜனாப் டீ. எம். எஸ். ஹமீத் (02.06.1938-11.09.1938) அவர்கள் கடமையாற்றினார். அவரைத் தொடர்ந்து திரு. கே. கணபதிப்பிள்ளை அதிபராகவிருந்தார். (11.09.1938-26.03.1939) இவருடைய காலத்தில் மாணவர் தொகை 153 ஆகவிருந்தது. பாலர் கீழ்ப்பிரிவில் 123 மாணவர்களும், பாலர் மேற்பிரிவில் 30 மாணவர்களும் கல்வி கற்றனர். இரு ஆசிரியர்கள் (ஒரு ஆண், ஒரு பெண்) கடமையாற்றினர். ஒரு கட்டிடத்தில் பாடசாலை நடைபெற்றது. 02.05.1939-18.12.1953 வரை 14 வருடங்கள் திரு. எஸ். கார்த்திகேயன் அதிபராகக் கடமையாற்றினார். வகுப்புக்கள் பாலர் கீழ்ப்பிரிவிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை நடைபெற்று வந்தன. 1953 இல் மாணவர் தொகை 383 ஆகவிருந்தது.

1954 இல் என். ஏ. எச். எம். அன்வர் அவர்கள் இக்கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். 1968 வரை 14 வருடங்கள் கடமை ஆற்றினார். இவர் அக்குறணையின் முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியராவார். பெற்றோருடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதன் காரணமாக இவரது காலத்தில் மாணவர் தொகை 1000 ஆக அதிகரித்தது. ஆசிரியர் தொகை 30 ஆகக் காணப்பட்டது. ஒரு கட்டிடமாக இருந்த இக்கல்லூரி, மூன்று கட்டிடங்களைக் கொண்டதாக மாறியது. இவரது காலத்தில் 1958 இல் க. பொ. த. (சா. த.) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. போதியளவு ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர். சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளும் பெறப்பட்டன. பாடசாலைக்குக் காணி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

*1970 இல் இக்கல்லூரி மகா வித்தியாலய தரத்தைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து ஜனாப் ஏ. எச். எஸ். மொஹமட் (15.07.1970–05.01.1975) அதிபராக நியமனம் பெற்றார். இவருடைய காலத்தில் க. பொ. த. (உ. த.) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவரால் இரு மாடிக் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆசிரியர் தொகை 42 ஆகக் காணப்பட்டது.*

*24.02.1975–16.01.1978 காலப்பகுதியில் ஜனாப் எச். எம். பஷீர் அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இரு மாடிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டமை பாடசாலை நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டமை இக்காலப்பகுதியின் முக்கிய நிகழ்வுகளாகும்.*

*1978 இல் ஜனாப் ஏ. லீ. எம். பளீல் அதிபராக நியமிக்கப்பட்டார். (16.01.1978 - 01.01.1980) கல்லூரியின் முன்னேற்றம் கருதி இவர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். இக்கல்லூரியின் பெயர் 'அக்குறணை ஸாஹிராக் கல்லூரி' எனப் பெயர் மாற்றம் பெற்றது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். புதுப் பாடசாலை கீதம், பாடசாலைச் சின்னம், பாடசாலை கொடி என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. பெற்றோரின் உதவியோடு விளையாட்டு மைதானம் விரிவுபடுத்தப்பட்டது. விளையாட்டுத்துறை ஊக்குவிக்கப்பட்டதால், வட்டார மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் இக்கல்லூரி முக்கிய இடங்களைப் பெற்றது. இவரது காலத்தில் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது. 1978 இல் ஜி. ஸி. ஈ. ஓ/ எல் முடிவுகள் மிகச் சிறப்பாக இருந்தன. தோற்றிய 19 பேரில் 12 பேர் உயர் வகுப்புக்குத் தகுதி பெற்றனர். மாணவர் தொகை 1099 இல் இருந்து 1398 ஆக் உயர்ந்தது. ஆசிரியர் தொகை 44 இல் இருந்து 56 ஆக உயர்ந்தது.*

*01.01.1980 – 01.01.1984 வரை ஜனாப் ஏ. ஸி. எல். எம். தாஹிர் அதிபராகக் கடமையாற்றினார். லீவு எடுக்காமல் திறமையாகச் சேவை செய்யும் தன்மையுள்ள இவர் கல்வி, விளையாட்டு முதலிய துறைகளில் கல்லூரியை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றார். இவரது காலத்தின் பின் ஏற்பட்ட வெளியார் தலையீடு, மாணவர் அமைதியின்மை காரணமாகக் கல்லூரியின் முன்னேற்றம் மந்த நிலையிலேயே இருந்தது. 1984 இற்குப் பிறகு அடிக்கடி அதிபர்கள் மாற்றப்பட்டார்கள். இக்காலப்பகுதிகளில் மாணவர் தொகை 1399 இல் இருந்து 1636 ஆக உயர்ந்தது. ஆசிரியர் தொகை 42 ஆக இருந்தமையால், 36 தொண்டர் ஆசிரியர்களை நியமித்து வகுப்புக்களை நடாத்தினர். இவரது காலத்தில் மைதானவோரமாக கட்டொன்று போடப்பட்டது. பதினைந்து வருட காலத்தில் பத்து பேர் அதிபராக கடமையாற்றியுள்ளதைக் காணலாம்.*

*ஜனாப் இசட் ஏ. எம். ஹனீபா (1984.01.01 – 1987.03.13) காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றினார். இவரது காலத்தில் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது. தொடர்ந்து ஜனாப். என். எம். ஹலீம் அதிபராக இருந்த போது பெரும் திருத்த வேலைகள், கட்டுகள் அமைத்தல் போன்ற, வேலைகள்*

மேற்கொள்ளப்பட்டன. ஜனாப் ஏ. சீ. ஏ. ரஸ்லாக் 07.02.1990 - 05.01.1992 காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றினார். இக்காலத்தில் மாணவர் கேட்போர் கூடம் பெற்றுக் கொள்ளப்பட்டமை முக்கிய அம்சமாகும். 20.05.1992 - 10.09.1994 வரை ஜனாப் எம். ஜெய்னுதீன் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். ஜனாப் ஏ. எச். எம். ஹுஸைன் அதிபராகவிருந்த காலத்தில் நலன்விரும்பி ஒருவரால் நூலகத்திற்கான அடிக்கல் வைக்கப்பட்டது. 1997.01.06 இல் அதிபராகக் கடமையேற்ற ஜனாப் ஏ. ஸி. ஏ. ஜலீல் அவர்களது காலத்தில் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. அத்தோடு கணனி பகுதி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரியின் அறுபது ஆண்டு கொண்டாட்டமும் நினைவு மலர் வெளியீடும் இக்காலப்பகுதியில் இடம்பெற்றது.

இப்பெரும் வித்தியாசாலைகளின் வரலாற்றினை விரிவுபடுத்தி எழுதியிருப்பினும் வரலாறு படைத்து வரும் மகாவித்தியாலயங்கள் இன்னும் அக்குறணையில் இல்லாமல் இல்லை. 1946 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அக்குறணைப் பெண்கள் பாடசாலை இன்று க. பொ. த சாதாரண தரப் பரீட்சையில் மெச்சத்தக்க பெறுபேறுகளைத் தரும் மகா வித்தியாலயமாக விளங்குகின்றது. இதைத் தவிர கோடோபா தனியார் கல்லூரி உட்பட 15 பாடசாலைகள் முஸ்லிம்களின் கல்விக்காகப் பணியாற்றி வருகின்றன.

### அக்குறணைப் பாடசாலைகளின் விபரம்

| பாடசாலையின் பெயர் | ஆரம்பம் | மாணவர் தொகை | ஆசிரியர் | தேவைகள் |
|---|---|---|---|---|
| 1. அஸ்ஹர் தேசிய பாடசாலை | 1907 | 2013 | 59 | அதிபர், ஆசிரியர், கட்டிடம் |
| 2. ஸாஹிரா தேசிய பாடசாலை | 1938 | 1350 | 49 | |
| 3. மாவத்தபொல முஸ்லிம் மகா வித்தியாலயம் | 1940 | 198 | 14 | மின்சாரம், விஞ். கூடம், வாசிகசாலை |
| 4. குருகொடை பெண்கள் பாடசாலை | 1942 | | | |
| 5. அக்குறணை பெண்கள் பாடசாலை | 1946 | 1090 | 42 | விஞ். கூடம் மனையியல் அறை |
| 6. குருகொடை ஆண்கள் பாடசாலை | 1947 | 508 | 16 | ஆசிரியர், கட்டிடம் |
| 7. மல்வானஹின்னை முஸ்லிம் வித்தியாயலம் | 1952 | 326 | 15 | மலசல கூடம், மதில் |
| 8. நீரல்லை முஸ்லிம் வித்தியாலயம் | 1969 | 369 | 15 | கட்டிடம் |

| பாடசாலையின் பெயர் | ஆரம்பம் | மாணவர் தொகை | ஆசிரியர் | தேவைகள் |
|---|---|---|---|---|
| 9. பானகமுவை முஸ்லிம் வித்தியாலயம் | 1969 | 106 | 06 | கட்டிடம் |
| 10. பங்கொள்ளாமட மு. ம. வித்தியாலயம் | 1936 | 419 | 16 | தண்ணீர், மலசலகூடம், வேலி, கட்டிடம் |
| 11. தெலும்புகஹவத்தை மு. வித்தியாலயம் | 1959 | 620 | 23 | தண்ணீ, கட்டிடம் |
| 12. குருந்துகஹ-எல மு. வித்தியாலயம் | 1969 | 523 | 18 | கட்டிடம் |
| 13. மல்கமன்தெனிய முஸ்லிம் வித்தியாலயம் | 1988 | 225 | 08 | கட்டிடம் |
| 14. நெதர்பீல்ட் கல்லூரி | 1987 | 507 | 46 | மைதானம், விஞ்ஞான உபகரணம் |
| 15. கோடோபா கல்லூரி | 1999 | 363 | 23 | |

## இறுதியில் .................

அக்குறணையின் வரலாறு மூன்று அத்தியாயங்களாக, மூன்று தலையங்கங்களில் கீழ் இங்கு ஆராயப்பட்டது. இதனை அக்குறணை வாழ் முஸ்லிம்களின் பூரண வரலாறாகக் கொள்ள முடியாவிடினும், ஆழமான ஆராய்வுகளின் வெளிப்பாடாகக் காண முடியாதவிடத்தும், எதிர்காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றினை நெறியுடன் ஆராய்வோருக்குச் சில தடயங்களையாவது வழங்கும் என நம்புகின்றோம்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மலைநாடும், குறிப்பாக மிகப் பழைமையான பாரம்பரியம் ஒன்றினைச் சான்று பகர்ந்து நிற்கும் அக்குறணையும் மறக்க முடியா இடம்பெற வேண்டிய பெயர்களாகும். கண்டி மாவட்டத்தின் வரலாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் முன்னரே பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதினின்றும் அக்குறணையின் வரலாற்றை வேறுபடுத்தி விளக்க முயற்சித்துள்ள இந்நூல் நிச்சயம் உங்கள் மனதை நிரப்பியிருக்கும் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றோம்.